Registered as a Newspaper in Ceylon ★★★★ விலை சதம் 10

# ஈழநாடு
THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily
மலர் 8 30-10-66 இதழ் 260

பராபவ ஐப்பசி 14 ஜ' றஜப் 15 ஞாயிற்றுக் கிழமை

பாவனைக்குச் சிறந்தது
டொலர் மார்க்
அலுமினியப் பாத்திரங்கள்
ALUMINIUM INDUSTRIES (CEYLON) LTD. ONE DOLLAR
டொலர் கோர்ப்பரேஷன்
14, டாம் வீதி கொழும்பு

## ஹரிமன் வந்தார்

கொழும்பு, சனி
அமெரிக்காவின் உலகைச் சுற்றும் தூதர் திரு. அவெரல் ஹரிமன் இன்று நண்பகலில் கட்டுநாயக்கா விமானநிலையத்தில் வந்திறங்கினார். பாதுகாப்பு அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி மற்றும் அரசு உயர்தர உத்தியோகஸ்தர்கள், பிரமுகர்கள் ஆகியோர் திரு ஹரிமனை விமானநிலையத்தில் வரவேற்றனர்.

திரு. ஹரிமன், தாம் இலங்கைக்கு விஜயஞ்செய்

(8-ம் பக்கம் பார்க்க)

# வல்வைக் கடலில் துப்பாக்கிச் 'சண்டை'

## தமிழரசு தீர்மானத்துக்கு அரசாங்கத்தினர் மகிழ்ச்சி

கொழும்பு, சனி
தேசிய அரசாங்கத்தில் தொடர்ந்து அங்கம் வகிப்பதென்றும் தற்போதைய சூழ்நிலையில் அரசாங்கத்தை விட்டு விலகுவதில்லை யென்றும் தமிழரசுக்கட்சி செய்துள்ள முடிவை அரசாங்கவட்டாரங்கள் உற்சாகத்துடன் வரவேற்றுள்ளன.

கொழும்பில்கிடைத்த செய்திகளின்படி தற்போதைய சூழ்நிலையில் பிரதம மந்திரிக்கு நிபந்தனையற்ற முறையில் ஆதரவளிப்பதென தமிழரசுக்கட்சி வாக்குறுதி அளித்திருப்பதாகத் தெரிகின்றது.

சமீபத்தில் கூடிய தமிழரசுக்கட்சியின் பொதுச் சபை தற்போதைய சூழ்நிலையில் அரசாங்கத்தை விட்டு விலகுவதில்லை யென்று முடிவு செய்தது.

அண்மையில் நடைபெற்று முடிந்த 'குட்டி' பொதுத் தேர்தலின்பின் தமிழரசுக் கட்சிக்கும் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் இதர கட்சிகளுக்குமிடையில் கருத்துவேற்றுமை உருவாகக் கூடும் என்றும் அதன்காரணமாக தமிழரசுக்கட்சி அரசாங்கத்தைவிட்டு விலகும் சூழ்நிலை உருவாகும் என்

(8-ம் பக்கம் பார்க்க)

## தேசிய சுவீப் முடிவுகள்

கொழும்பு, சனி
தேசிய லொத்தர் சபையின் 113 வது சீட்டிழுப்பு கொழும்பு ஆனந்தா கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. முடிவுகள் வருமாறு:

1-ம் பரிசு
20 K 0647 - ரூ. 1,00,000
2-ம் பரிசு
31 X 0004 - ரூ. 40,000
3-ம் பரிசு
09 J 0642 - ரூ. 10,000

(5-ம் பக்கம் பார்க்க)

## பொலிஸ் சூட்டதில் "கள்ளக் குடியேற்ற காரர்" பலி!

மாவிட்டபுரம், சனி
வல்வெட்டித்துறைக்கும் தொண்டமனாற்றுக்குமிடையிலுள்ள சின்னமலை என்னுமிடத்தில் நேற்று நள்ளிரவு சட்டவிரோதக் கடத்தல்காரர் என்று கருதப்பட்டவர்களுக்கும் பொலிஸாருக்குமிடையே ஆழ்கடலில் நிகழ்ந்த துப்பாக்கிப் பிரயோகத்தில் தென்னிந்தியாவிலுள்ள தஞ்சாவூர் ஜில்லாவைச் சேர்ந்த சாகுல் ஹமீது என்பவர் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களினால் பலியானார்.

இச்சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

நேற்றிரவு கிடைக்கப் பெற்ற தகவல்களைத்தொடர்ந்து காங்கேசன்துறைப் பொலிஸ் தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டர் திரு எஸ். வீ. மூர்த்தி தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டியொன்று சின்னமலையில் இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான கள்ளக் கடத்தல் பொருட்களைக் கைப்பற்றியிருந்தது. இதனைத் தொடர்ந்து பொலிஸார் இப்பகுதியில் நேற்றிரவு ரோந்து சுற்றிவரும்

(8-ம் பக்கம் பார்க்க)

### 'கடலில் வெடிச்சத்தம் கேட்டது; ஹமீதுதலையில் இரத்தம்பீறிட்டது'

வல்வெட்டித்துறை, சனி
"நானும் என்னுடன் வந்த மூவரும் தஞ்சாவூர் ஜில்லா அம்மாபட்டினத்தைச் சேர்ந்தவர்கள். சென்ற 27ந் தேதி பிற்பகல் இரவு 8 மணியளவில் கோடிக்கரைக்குப் பத்து மைல் தூரத்தில் கடலில் மீன்பிடிப்பதற்காக நங்கூரம் பாய்ச்சிக்கொண்டிருந்தோம். அப்போது முன்பின் தெரியாத ஒரு கிழவர் வள்ளத்தில்வந்துதாம் கொழும்புக்குப்போகப்போவதாகவும், தம்மைத்தேடி இடையில் வள்ளமொன்று வருமென்றும் இவ்வளவு தூரத்துக்குத் தம்மைக் கூட்டிக்கொண்டுபோய் விடுமாறும் 25 ரூபாய் தருவதாகவும் சொன்னார். நாங்கள் இதற்குச் சம்மதித்து அடுத்த நாட்காலை 7 மணியளவில் அவ்விடமிருந்து புறப்பட்டோம்."

வல்வெட்டித்துறைக்கும், தொண்டமானாற்றுக்கும் இடையிலுள்ள சின்னமலைக் கடலில் நேற்று நள்ளிரவு துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் மரணமானது சம்பந்தமாக ஸ்தலத்தில் நடைபெற்ற விசாரணையின்போது கறுப்புடையார் பெருமாள் சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு கூறினார். பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. றொபேர்ட்சில்வா இவ் விசாரணையை நடாத்தினார்.

அவர் மேலும் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

#### சூடு விழுந்தது

மேற்படி கிழவர் தமக்குப் பாதை தெரியுமென்றும் அவரே வள்ளத்தையும் ஓட்டிக்கொண்டு வந்தார். நடுக்கடலில் ஒரு வள்ளம் வந்தது. அப்போது கிழவர் அவ்வள்ளக்காரர்களுடன் கதைத்தார். சிறிது நேரத்தின் பின் எங்களுக்குப் பின்னிருந்த ஒரு வள்ளத்திலிருந்து எங்களை நோக்கி ஒருவர் டோர்ச்லைட் அடித்தார். அதன்பின் வெடி

(8-ம் பக்கம் பார்க்க)

## கொழும்பு ஸ்ருடியோ கௌரவித்து வழியனுப்பியது



பொதுநல சேவையில் கண்ணியத்துடனும் பொறுப்புணர்ச்சியுடனும் நடந்துகொண்ட இரண்டு பஸ் ஊழியர்களை யாழ்ப்பாணத்திலுள்ள கொழும்பு ஸ்ருடியோ ஸ்தாபனம் பாராட்டிக் கௌரவித்துள்ளது.

இ. போ. ச. பஸ் சாரதி திரு. கே. எச். கே. எமிஸ் சிங்கோ, கண்டக்டர் திரு. டபிள்யு. ஏ. டி. பி. குணதிலகா ஆகிய இருவரும் கடமையாற்றிய ஒரு பஸ்ஸில் தலைமையாசிரியர் ஒருவர் ஆறாயிரம் ரூபா ரொக்கப்பணத்தைத் தவறவிட்டுச் சென்றதைக் கண்டெடுத்து சொந்தக்காரரிடம் ஒப்படைத்திருந்தனர். இந்த நல்ல சேவையைப் பாராட்டுமுகமாக இலங்கை புகையிலைக் கம்பெனி தனது செலவில் அவர்களிருவரையும் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பிவைத்தது. யாழ்ப்பாணத்துக்கு இவர்கள் வந்துசேர்ந்த பொழுது இரு ஊழியர்களையும் கௌரவிக்குமுகமாக கொழும்பு ஸ்ருடியோ [illegible] அழைத்துச் சென்று புகைப்படங்கள் பிடித்து [illegible] யாளருக்கு முன்மாதிரியாக இவர்கள் நடந்துகொண்டதைப் பாராட்டி வழியனுப்பி வைத்துள்ள. 1351

## சுதந்திரா-மார்க்ஸீய கட்சிக்குள் வேறுபாடு?

கொழும்பு, சனி
இனிவரும் உபதேர்தல்களில் போட்டியிடும் அபேட்சகர்களைத் தெரிவு செய்யும் போது சுதந்திரக்கட்சியினர் சமசமாஜக்கட்சியினருடன் கலந்தாலோசித்த பின்னரே முடிவுகள் செய்ய வேண்டும் என்று சமசமாஜக்கட்சி மேலிடம் சுதந்திரக்கட்சி தலைமைப்பீடத்தைக் கேட்டிருக்கின்றது.

கடந்த குட்டி பொதுத் தேர்தலின்போது திருமதி பண்டாரநாயகா தேர்தல் பிரசார வேலைகளைத் தனிப்பட்ட முறையிலேயே நடத்தியதாகவும் அதனால் தேர்தல் முடிவுகளினால் ஏற்பட்ட புகழ் சுதந்திரக்கட்சிக்கு மட்டும் போய்ச் சேர்ந்ததாகவும், 'மார்க்ஸீய' கட்சிகளுக்கு எதுவித பயனும் இல்லாமல் போய்விட்டதென்றும் எதிர்க்கட்சி வட்டாரங்களில் கருத்து நிலவுகின்றது.

கடந்த பொதுத்தேர்தலின்போது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் மார்க்ஸீயக் கட்சிகளும் கூட்டுச்சேர்ந்த போது, அபேட்சகர்களைத் தெரிவுசெய்வதிலும் பிரசார வேலைகளிலும் இருதரப்பாரும் கலந்துதான் முடிவுகள் எடுக்கவேண்டும் என்று உடன்பாடுசெய்து கொள்ளப்பட்டதாக அறியப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரிவிளம்பரம்

### தேவை

மனேஜர்:

30 வயதிற்கும், 40 வயதிற்குமிடைப் பட்டவராகவும் கூட்டுறவுப் பயிற்சி பெற்றவராகவும், S S C. சித்தி யெய்தியவராகவும் வியாபார அனுபவமுடையவராகவும் உள்ள மனேச்சர் தேவை. சம்பளம்: ரூபா 100 சகல படிகளுமுட்பட. பிணை: உரொக்கம் 1000. ஆதனம்: 2000. இட்டிய காலத்து இரு நற்சாட்சிப் பத்திரங்களுடன் 7-11-66-க்கு முன் விண்ணப்பங்கள் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். காரியதரிசி, சங்கானை கிழக்கு ப. நோ. கூ. ச, சங்கானை. 1455

### விற்பனைக்கு

தென்னந்தோட்டம்

எழுதுமட்டுவாளில் ஓர் நல்ல முறையிலிருக்கும் 20ஏக்கர் கொண்ட தென்னந் தோட்டம் போக்குவரவுக்கு சகல வசதிகளுடையது. விற்பனைக்குண்டு விபரங்கட்கு விளம்பர இல 1457 மே/பா என எழுதி மூலம் விண்ணப்பிக்கவும். 1457

உடுப்புகள்:

உங்கள் சிறு பிள்ளைகளுக்கும், பெரிய பெண் பிள்ளைகளுக்கும் நவீன முறையில் வேலைப்பாடுகள் அமைந்த உடுப்புகள் விற்பனைக்கு உண்டு. இன்னும் ஒடருக்கு உங்களுக்கு ஏற்ற முறையில் எந்த விதமான டிசைன் வேலைகளில் வேண்டுமானும் குறித்த தவணையில் குறைந்த செலவில் தைத்துக் கொடுப்போம். ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள். வேலறிட் தையல் நிலையம் (டபருமின் முன்) 61 மெயின் வீதி. யாழ்ப்பாணம். 1456

### சேவை

தையல் மெஷின்:-

தையல் மெஷின்கள் உங்கள் திருப்திக்கு திருத்திக் கொடுக்கப்படும். உதிரிப் பாகங்களும் பெற்றுக்கொள்ளலாம். அருணு ஏஜன்ஸீஸ், அளவெட்டி. 1289

### வைத்தியம்

நோய்வு, சுசம், நீரிழிவு, சேந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய சுற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். சித்த டாக்டர் பரிபூரணனந்தர் J. P, கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

## திருமண அழைப்பு

அன்புடையீர்.

நிகழும் பராபவ வருடம் ஐப்பசி 15-ம் நாள் (31 10-66) திங்கட்கிழமை இரவு 9-20—10-50 மணி வரையுள்ள மிதுன இலக்கின சுபமுகூர்த்த வேளையில் எமது புதல்வனும், இயற்கையெய்திய மலாய புனைவிரத ஸ்தாபன அதிபரின் புத்திரனுமாகிய திருநிறைசெல்வன் வயிரமுத்து பூபாலசுந்தரம் (அப்போதிகரி, மறிச்சுக்கட்டி, மன்னூர்) அவர்கட்கும், திருநிறைசெல்வி தம்பிராசா தவமணிதேவிக்கும் திருமணஞ் செய்துவைக்கப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், உறவினர்களையும், நண்பர்களையும் அன்புடன் அழைக்கிறோம். தங்கள் நல்வரவை நாடும்: திருமதி வ. நல்லம்மா, வ. மகாலிங்கமும் பாரியாரும், வ. நவரத்தினம் இ. போ. ச. யாழ்நகர், வே. தம்பிராசாவும் பாரியாரும் குப்பிழான், கன்னும். 1151



5வது வெற்றி வாரம்!

கிங்ஸலி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவ (கொட்டாஞ்சேனை)

விஜிதா (ஹட்டன்) விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீ கிருஷ்ண (திருமலை)

மொடோர்ண் (பண்டாரவளை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

தீவொளி (நுவரெலியா) கல்யாணி (நாவலப்பிட்டி)




எம். ஜி. ஆர்., கே. ஆர். விஜயா

சௌகார் ஜானகி, நாகேஷ், பாலையா

மற்றும் பலர் நடிக்கும்

ஆர். ஆர். பிக்சர்ஸ்

பணம் படைத்தவன்


## உரஉற்பத்தி தொழிற்சாலை

கொழும்பு, சனி

சபுகஸ்கந்த எனுமிடத்தில் ரூ. 18 கோடி செலவில் உரஉற்பத்தித்தொழிற்சாலையொன்றை நிர்மாணிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. இதை நிறுவுவதில் வெளிநாடுகளின் உதவியும் கிடைக்குமென அறிவிக்கப் பட்டுள்ளது இந்தத்தொழிற்சாலை இயங்கத்தொடங்கியதும் ரூ. 4 கோடி வரையான வெளிநாட்டுச் செலாவணி மிச்சப்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

## கதாப்பிரசங்கம்

வட்டுக்கோட்டை, சனி

மூளாய் சித்தி விநாயகர் ஆலயத்தில் பிரம்மஸ்ரீ சிவ வை. நித்தியானந்த சர்மாவின் 'சிவசக்தி சபதம்' என்னும் பொருள் பற்றிய கதாப் பிரசங்கம் நேற்றிரவு நடைபெற்றது. கூட்டு வழிபாடும் பூசையும் இடம்பெறறன.

## வானொலி

### கொழும்பு

ஞாயிறு 30 - 10 - 66

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

844 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50சைவநற்சிந்தனை, 6-55 கிறிஸ்தவ நற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 7-45 திரைஇசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

844 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 மெல்லிசை.

844 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததினவாழ்த்துக்கள், 5-30 மடத்திலிருந்து.

இரவு 6-10 விவசாயச் செய்திகள், 6-15 வாத்திய இசை, 6-30 நாடோடிப் பாடல்கள், 6-45 பஜனை, 7-15 நாடக அரங்கு, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 பாட்டு — தனேஸ்வரி முத்துக்குமாரு, தில்லைநாயகி நாகலிங்கம், 10-00 மாதர் கேட்டவை.


மகாத்மா தியேட்டர்
(தெல்லிப்பழை)
தினசரி 6-30, 9-30
போயாதினங்களில் காலை 10 மணி
சிவாஜி — சாவித்திரி நடித்த
திருவிளையாடல்

நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
சிவாஜி-சௌகார்ஜானகி நடித்த
பார் மகளே பார்

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 3-30, 6-30, 9-45
போயா தினங்களில் 4 காட்சிகள்
CHAND MERE AJA
(ஹிந்தி)

REGAL—JAFFNA
NOW SHOWING
Peter Sellers
Paula Prent'ss
in
THE WORLD OF
HENRY ORIENT


## பலாத்கார வழக்கில் எதிரி விடுதலை

சாவகச்சேரி, சனி

இவ்வருடம் ஆகஸ்ட் மாதம் 7-ந் திகதி நான் வீட்டினுள் படுத்துறங்கும் போது யாரோ என்னைப்பிடித்து அழுத்தியதை உணர்ந்தேன். நான் உடனே துடிதுடித்து எழுந்து பார்த்த போது எதிரியைக் கண்டேன்.

இவ்வாறு பலாத்காரவழக்கொன்று சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு றொபேட் சில்வா முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப் பட்டபோது சாட்சியமளித்த வல்லிபுரம் அன்னம்மா என்னும்பெண் கூறினர்.

இவ்வழக்கில் இவ்வருடம் ஆகஸ்ட் 7-ம் திகதி சாவகச்சேரி தொகுதியில் உள்ள இரித்தக்குறிச்சி வரணி என்னுமிடத்தில் கிருஷ்ணன் முருகுப்பிள்ளை என்பவர் வல்லிபுரம் பெண் அன்னம்மா என்பவர் வீட்டினுள் அத்துமீறிப் பிரவேசித்து அப்பெண் நித்திரையில் இருந்த சமயம் பலாத்காரம் பிரயோகிக்க முயற்சித்ததாக சாவகச்சேரிப் பொலிசாரால் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

எதிரிசார்பில் புறக்டர் வி. செல்லத்தம்பி ஆஜராஞர். வழக்காளி தரப்பில் சாவகச்சேரிப் பொலிஸ் சார்ஜன்ட் திரு. கே. முத்துக்கிருஷ்ணன் வழக்கை நடத்திஞர்.

கே. சுப்பிரமணியம் என்பவர் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:— வீட்டில் அலறிய சத்தம்கேட்டு எழுந்தநான் எதிரியைக் கண்டதும் பிடிப்பதற்காகத் துரத்திஞேன். ஆஞல் அவர் ஓடிவிட்டார். என்ஞல் பிடிக்க முடியவில்லை. ஆஞல் எதிரி வந்தது என்னநோக்கமென எனக்குத் தெரிந்திருக்கவில்லை என்ருர்.

விசாரணை முடிவில் சாட்சிகள் முரண்பாடாக இருந்ததாகக்கூறி மாஜிஸ்திரேட் எதிரியைச் சுற்றவாளியெனக்கண்டு விடுதலை செய்தார்.

## "மரபு வழி"

நல்லூர், சனி

"முன் வந்த வல்லவர்கள் வகுத்துவிட்ட வழியைப் பின் வந்தவர்கள் பின்பற்றிச் செல்லுகிருர்கள். இது மரபு எனப்படுகிறது. சமுதாயம், சமயம், மொழியாட்சி முதலிய துறைகளிலே பலவகையான மரபுகள் கைக்கொள்ளப்படுகின்றன."

திருநெல்வேலி செங்குந்தா இந்துக்கல்லூரி உயர்தர மாணவர் மன்ற விசேட விழாவில் இலங்கை பல்கலைக்கழகத் தமிழ் விரிவுரையாளராகத் தெரிவு செய்யப்பட்ட செல்வி இ. கோமளாதேவி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

## அடையாளம் காணுமலே அடக்கம்

திருநெல்வேலி, சனி

இம்மாதம் 22-ம் திகதி மண்டைக் கடற்கரையில் வந்து ஒதுங்கி பொலிசாரால் எடுத்துச்செல்லப்பட்ட ஆணின் சடலம் இறுதிவரை அடையாளம் காணப்படாமலேயே இன்று காலை அடக்கம் செய்யப்பட்டது.

மரண விசாரணை செய்யப் பட்டபின்னர் பிரேத பரிசோதனை செய்யப்பட்டு இச் சடலம் இம்மாதம் 23-ம் திகதி முதல் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அடையாளம் கண்டுபிடிப்பதற்காகப் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தது.

## விளம்பரம்

### விற்பனவு விளம்பரம்

சாவகச்சேரி டிஸ்திறிக் கோட்டு 2862/MB இலக்க வழக்கில் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி கீழே விபரிக்கப்பட்டிருக்கும் ஆதனங்கள் 1966-ம் ஆண்டு கார்த்திகை மீ 25-ம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்த் காணிக்குள் நின்று பின்னுற் காணும் ஆதனடாப்பின் ஒழுங்கின்படி என்ஞல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

விபரம்

யாழ்ப்பாணம் திவ்வெல்வேலி:

1. சண்முகம் தணிகாசலம்
2. பெண் செந்தநாயகி, வழக்காளிகள்

எதிராக

நாவற்குளி கைதடி

1. முத்துக்குமாரு செல்லத்துரை. 2, (இறந்தது) சுப்பர் முத்துக்குமாரு, 3. காலஞ் சென்ற 2-ம் எதிராளியின் காரியஸ்தி என்ற வகையிலும் தனக்காகவும் சுப்பர் முத்துக்குமாரு மனைவி பெண் குஞ்சுப்பிள்ளை. 4. முத்துக்குமாரு சுப்பையா, 5. கைதடி முத்துத்தம்பி சின்னப்பா.

எதிராளிகள் அறவிட வேண்டிய தொகையின் விபரம்:

ரூபா 1270-ம் 31-3-64 தொடக்கம் 4-3-65 வரைக்கும் ரூபா 1000க்கு 12 வீத வட்டியும் கூடியதொகைக்கு 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 440-06 1/2ம் இதில் 30-8-65 கொடுபட்ட ரூபா 250-ம் 24-1-66 கொடுபட்ட ரூபா 100-ம் நீக்கி மிகுதி.

ஆதனடாப்பு

1. நாவற்குளி இறை வாசி வயல், நெற்பரப்பு 18. ஆஞல் ஆட்சிப்படிக்கு நெற்பரப்பு 20. எல்லை கிழக்கு கந்தன் நாகமுத்துவுக்குடைய ஆதனம். வடக்கு 1-ம், 2-ம், 3-ம் எதிராளிகளுக்குடைய ஆதனம் மேற்கு சண்முகம் பெண் சின்னத்தங்கச்சிக்குடைய ஆதனமும் கைதடி வீரகத்திப்பிள்ளையார் கோவிலுக்குடைய ஆதனமும், தெற்கு சுப்பர் முத்துக்குமாருவுக்கும் அவரின் சகோதரனுக்குப் பங்காளருக்குமுடைய ஆதனம் இந்த நெல்லு நிலம் முழுவதும்.

2. ஷை இறை, தச்சன் பள்ளம் வயல், நெற்பரப்பு 8 1/4, இதில் அரைவாசிக்கு மேற்குப் புறமாக நெற்பரப்பு 4 1/8 எல்லை கிழக்கும் வடக்கும் சதாசிவம் பெண் நாகம்மாவுக்குடைய ஆதனம். மேற்கு பொன்னம்பலம் செனுதிராசாவுக்கு உடைய ஆதனம். தெற்கு சின்னத்துரை பெண் வேலம்மாவுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம்.

3. ஷை இறை கறுப்பன் பள்ளம் வயல் நெல்பரப்பு 6 எல்லை கிழக்கு கணபதி மகள் சின்னம்மாவுக்குடைய ஆதனம். வடக்கு சின்னப்பு மைம்பெண் சின்னுச்சிக்குடைய ஆதனம். மேற்கு சின்னத்தம்பி செல்லருக்கும் பங்காளருக்குமுடைய ஆதனம். தெற்கு தேவாமுத்துக்குமாருவுக்குடைய ஆதனம். இது முழுவதும்.

எஸ். ஸி. கனகசபை,
கொமிஷனர்.

புலோலி கிழக்கு,
25-10-1966. 1352

## பாதை சீர்கேடு

கோண்டாவில், சனி

மன்ஞர்-சங்குப்பிட்டி வீதி குண்டும் குழியுமாக இருப்பதால் வாகனப்போக்கு வரத்து சீர்கெட்ட நிலையில் இருக்கின்றது. சேவைக்கு விடப்பட்ட மிகவும் பழுதடைந்த பஸ்கள் இவ்வீதியால் செல்ல முடியாதிருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீன அணு ஆயுத ஏவுகருவிகள் முன்னேற்றம்

## அமெரிக்காவின் 6 "கிரகங்கள்" கண்காணிக்கின்றன

வாஷிங்டன், அக்டோபர் 29

அணுகுண்டு, அணு ஆயுத ஏவுகருவிகள் ஆகியவற்றின் உற்பத்தியில் கம்யூனிஸ்ட் சீனா அடைந்துவரும் முன்னேற்றங்களை ஆறு அமெரிக்க செயற்கைக்கிரகங்கள் மிகவும் உன்னிப்பாகக் கண்காணித்துவருகின்றன என்று அமெரிக்கா நேற்று உத்தியோக பூர்வமாக அறிவித்தது.

இந்த செயற்கைக் கிரகங்களிடமிருந்து கிடைக்கப்பெறும் தகவல்களைக்கொண்டே அமெரிக்காவின் பாதுகாப்புத்திட்டங்கள் கவனிக்கப்பட்டு வருகின்றன என்றும் இவ்விஷயத்தில் அமெரிக்க விஞ்ஞானிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக வெளியிடப்பட்ட ஒரு அறிக்கையில் 1964-ம் ஆண்டில் கம்யூனிஸ்ட் சீனா தனது முதலாவது அணுகுண்டை வெடித்தபொழுதுகூட அது சம்பந்தமான தகவல்களை இச்செயற்கைக் கிரகங்கள் பூமிக்கு அனுப்பின என்றும் அப்பொழுதிருந்தே இச்செயற்கைக் கிரகங்கள் இயங்கிவருகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க பாதுகாப்பு அமைச்சு பேச்சாளர் ஒருவர் நேற்றுத் தெரிவிக்கையில் ஏவுகருவியுடனான அணுகுண்டுகளை சீனா தொடர்ந்து வெடிக்கும் என்று கூறினார்.

### ஹோ-சி-மின் பாராட்டு

ஹானோய், அக். 29

ஏவுகருவியின் உதவியுடன் சீனா முதற்தடவையாக நேற்றுமுன்தினம் அணுகுண்டொன்றை வெடித்ததை வடக்கு வியட்னாம் பிரதமர் திரு. ஹோ-சி-மின் பாராட்டியுள்ளார்.

சீனத் தலைவர் மா-ஸே-துங்குக்கு திரு. ஹோ-சி-மின் அனுப்பிய வாழ்த்துச் செய்தியில் சீனாவின் புதிய சாதனை குறித்துத் தமது நாட்டு மக்கள் பெருமகிழ்ச்சி அடைந்ததாகவும் வியட்னாம் மக்களின் போராட்டத்துக்கு சீனாவின் முன்னேற்றங்கள் பெரிதும் துணைபுரியும் என்றும் தெரிவித்துள்ளார்.

#### பாக். மந்திரி வாழ்த்து

நேற்று ஷங்காயில் (சீனாவின் ஒரு மாகாணம்) நடைபெற்ற விருந்து வைபவத்தில் கலந்துகொண்ட பாகிஸ்தான் வெளிநாட்டு மந்திரி திரு. ஷெரிபுதீன் பிர்வாதா சீனாவின் புதிய சாதனையை வெகுவாகப் பாராட்டியுள்ளார்.

விஞ்ஞான தொழில் நுட்பத் துறைகளில் சீனா கணிசமான அளவு முன்னேறிவிட்டது என்பதை அதன் புதிய சாதனை நிரூபித்துவிட்டது என்றும் அவர் கூறினார்.

### யுதாண்ட் கவலை

ஐக்கிய நாடுகள் தலைமைக் காரியதரிசி யுதாண்ட் நேற்று உத்தியோக பூர்வமாக வெளியிட்ட செய்தியொன்றில் சீனாவின் நான்காவது அணுகுண்டு வெடிப்புக்குறித்து மிகவும் கவலை தெரிவித்துள்ளார்.

"அணு ஆயுதங்களை உற்பத்தி செய்வதோ அணுகுண்டுகளை வெடிப்பதோ கூடாது என்று ஐ. நா. மகாசபை தீர்மானம் நிறைவேற்றியிருக்கையில் எந்த இடத்திலும் எவரும் எப்பொழுதும் அணுகுண்டு வெடிப்பது கண்டனத்துக்குரிய செயலாகும். சீனாவின் அணுகுண்டு வெடிப்பு கவலையளித்துள்ளது" என்று யுதாண்ட் தமது செய்தியில் தெரிவித்துள்ளார்.

### ஜப்பானில் கதிரியக்கத்துகள்கள்

நேற்று முன்தினம் சீனா வெடித்த நான்காவது அணுகுண்டின் கதிரியக்கத்துகள்கள் ஜப்பானை அடைந்திருப்பதாக டோக்கியோவிலிருந்து வெளியான அரசாங்கக் குறிப்பொன்று கூறுகிறது.

இத்துகள்கள் பற்றி விரிவான முறையில் ஆராய்ச்சி நடத்த உத்தரவிடப்பட்டுள்ளதென்றும் சீனாவுக்கு கடுமையான ஆட்சேபக் குறிப்பு அனுப்பப்பட்டுள்ளதென்றும் அந்தக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஜோன்ஸனுக்கு எதிரான ஆர்ப்பாட்டம்: பலர் கைது

கோலாலம்பூர், அக். 29

அமெரிக்க அதிபர் திரு. லிண்டன் பி. ஜோன்ஸன் நாளை மலேசியாவுக்கு விஜயம் செய்வதை முன்னிட்டு நேற்று கோலாலம்பூரில் ஆர்ப்பாட்டங்கள் இடம் பெற்றன.

இங்குள்ள ஹோட்டல் ஒன்றுக்கு முன்பாக சுமார் நூறு பேர் ஆர்ப்பாட்டம் நடத்தியதுடன் கற்கள் வீசி ஹோட்டல் யன்னல்களையும் உடைத்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஹோட்டலில் தான் அமெரிக்க துருப்புகள் தங்கியிருந்தனர்.

ஆர்ப்பாட்டங்களைக் கலைப்பதற்காக பொலிசார் ஆகாயத்தை நோக்கிச் சுட்டனர் என்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து சென்றனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. பலர் கைது செய்யப்பட்டு காவலில்வைக்கப்பட்டுள்ளனர்.

ஒரு இடத்தில் ஆர்ப்பாட்டக்காரர்கள் ஜோன்சன் கொடும்பாவி கொளுத்தினர்.

### விநோபாவிற்கு அமெரிக்க விருது

நியூயோர்க், அக். 29

மனிதரிடையே நல்லுறவை நிலைநாட்டப் பாடுபட்டுவரும், பூதானத்தலைவர் ஆசாரிய விநோபாபாவேக்கும், பிரஜா உரிமைகளை வளர்க்கப் பாடுபட்டதற்காக அமெரிக்க ஜனாதிபதி ஜோன்சனுக்கும் "மனிதக் குடும்பம் என்னும் ஸ்தாபனம் விருதுகள் வழங்கியுள்ளது.

### கப்பல்கள் மோதின: 75 பேர் பலி

மணிலா, அக். 29

மணிலா குடாவில் தென் பிலிப்பைன்ஸுக்குச் சென்ற சரக்குக் கப்பலும், அமெரிக்கக் கப்பலொன்றும் மோதிக்கொண்டதில் மாண்டவர்கள் எண்ணிக்கை 75 ஆக உயர்ந்துள்ளது.

### பீகிங் சார்பினர் கலைக்கப்பட்டனர்

டோக்கியோ, அக் 29

ஜப்பானிய கம்யூனிஸ்ட் கட்சியிலுள்ள பீகிங் சார்பினர் எட்டுப் பேர் கலைக்கப்பட்டுள்ளனர்.

### விவாதம் ஒத்திவைப்பு

ஐ. நா. (நியுயோர்க்). அக். 29

ஐ. நா. பந்தோபஸ்து சபையில் இஸ்ரேல்-ஸிரியா எல்லைத் தகராறு விவாதம் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

## 'தேவைக்கு ஏற்பவே கடன் பெறுங்கள்'

### யாழ் மாநகரசபை கமிஷனர் ஊழியருக்கு புத்திமதி

திருநெல்வேலி, சனி

"கடன் பெற வசதியுண்டு என்பதற்காகக் கடன்பட்டு பெரும் கடனாளிகளாகும் துர்பாக்கிய நிலைக்கு அநேகர் ஆளாகியுள்ளார்கள். இதனால் அவர்கள் முன்பிருந்த நிலையிலும் பின்நிலைமை மிகமிக மோசமாகிவிடுகின்றது. வசதியுள்ள இடங்களிலெல்லாம் பணம் பெறும் பழக்கம் எமக்கு ஒரு இயல்பாகிவிடுகின்றது. பெருந்தொகைகளை நீங்கள் கடனாகப் பெற்றால், இளைப்பாறும் சமயத்தில சங்கத்திடமிருந்து பெருந்தொகைகளை எதிர்பார்ப்பதற்கு மாறாக, பெருந்தொகையான பணத்தைக் கட்டித்தீர்க்க வேண்டிய நிலை உங்களுக்கு ஏற்படும். ஆகவே கிடைத்திருக்கும் வசதிகள் வாய்ப்புக்களைப் பயன்படுத்தும்போது காத்திரமான நல்ல தேவைகளுக்குப்பணத்தை உபயோகியுங்கள்"

மேற்கண்டவாறு யாழ்ப்பாணம் மாநகரசபை ஊழியர் சிக்கனச் சேமிப்புச் சங்கத்தின் புதிய அலுவலகக் கட்டடத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில் யாழ்ப்பாணம் மாநகர சபை ஆணையாளரான திரு. ஹரிசன் செல்வராஜா தெரிவித்தார்.

சங்கத்தின் தலைவர் திரு. கே. சிவஞானம் உரைநிகழ்த்துகையில், உள்ளூராட்சி சேவையை அரசாங்க சேவையுடன் ஒப்பிடுகையில் ஓர் இரண்டாந்தர சேவையாகவும், கன்னியக் குறைவாகவும் மதிப்பிட்டு வருகிறார்கள் என்றும் இந்த நிலை மாறவேண்டுமெனவும் எடுத்து[illegible]னர்.

கூட்டுற[illegible] தலைமை அலுவலக பரிசோதகர்கள் உட்பட இன்னும் பலர் பேசினர். காரியதரிசி திரு. த. தங்கராசா நன்றி தெரிவித்துப் பேசினர்.

### வானொலியில் நாட்டுப் பாடல்

சுழிபுரம், சனி

சுழிபுரத்தைச் சேர்ந்த செல்வன் ந. சிவசண்முகமூர்த்தி நாளை மாலை 6-30 மணிக்கு இலங்கை வானொலி தேசிய ஒலிபரப்பில் நாட்டுப் பாடல்கள் பாடுவார். இவர் இலங்கைச் சர்வகலாசாலை மாணவராவார்.

## பசுவதையைத் தடைசெய்ய ராஜ்யங்கள் கோரப்படும்

### பசு பாதுகாப்பு மகாநாடு 7-ல் நடைபெறும்

புதுடில்லி, அக். 29

பசுவதையைத்தடைசெய்யும் பிரச்னையைப்பயன் படுத்திக்கொண்டு வகுப்புவெறியைத் தூண்டி விடுவதற்கு சிலர் எடுத்துவரும்முயற்சிகளுக்கு இடம் கொடுப்பதில்லையென்று இந்திய அரசாங்கம் உறுதிகொண்டிருக்கிறது

பசு வதையை இன்னும் தடைசெய்யாமல் இருக்கும் ராஜ்யங்கள் தடையை விரைவில் அமுல்நடத்துமாறு மத்திய அரசாங்கம் வற்புறுத்தும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

பல ராஜ்யங்களில் குறிப்பாக வடநாட்டில் பசுவதை தடை செய்யப்பட்டுள்ளது.

அகில இந்திய பசு பாதுகாப்பு மகாநாடு புதுடில்லியில் அடுத்த மாதம் 7ம் திகதி ஆரம்பமாகும்.

பசு பாதுகாப்பு இயக்கம் சம்பந்தமாக இதுவரை 1000 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் இந்த இயக்கத்தை அரசாங்கம் அலட்சியம் செய்யக் கூடாதென்றும் தகுந்த சட்டம் இயற்றி பசு வதையையும் மற்றும் கால் நடைகள் வதையையும் அரசாங்கம் தடைசெய்யவேண்டும் என்றும் பசுபாதுகாப்பு சமிதி பம்பாய் இணைத் தலைவர் திரு. ஜீ. டி சோமாணி அறிவித்துள்ளார்.

# இராணுவ வெற்றி அசாத்தியம்: வெளியேறுவதே பரிகாரம்

## வியட்னாம் நெருக்கடி குறித்து அதிபர் டி' கோல் கருத்து

பாரிஸ், அக். 29

நேற்று மாலை பாரிஸில் நடைபெற்ற பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டில் பிரெஞ்சு அதிபர் ஜெனரல் டி கோல் வியட்னாம் நெருக்கடி பற்றித் தெரிவிக்கையில், அமெரிக்காவுக்கு இராணுவ வெற்றி கிடைப்பது அசாத்தியம் என்றும் அமெரிக்கத் துருப்புகள் உடனடியாக அங்கிருந்து வெளியேறுவதே சரியான பரிகாரமாகவிருக்குமென்றும் கூறினர்.

வியட்னாம் முழுவதிலும் சமாதானம் நிலவவேண்டும் என்று அமெரிக்கா விரும்புமானால் முதலில் வியட்னாம் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை வழங்கப்படவேண்டும்' என்று அதிபர் டி கோல் கோரினார்.

வியட்னாமில் அமெரிக்கா இன்னும் குண்டுவீச்சை நிறுத்தவில்லை இக்கட்டத்தில அங்கு சமாதானம் நிலவ வேண்டுமென்று எதிர்பார்ப் [illegible] வீச்சை நிறுத்தவேண்டும்' என்றும் அதிபர் டி கோல் கேட்டுக்கொண்டார்.

மத்தியஸ்த யோசனை எதுவும் உண்டா என்று நிருபர்கள் கேட்டதற்கு அப்படியான யோசனை எதுவும் கிடையாது என்றும் அதில் முயற்சி மேற்கொண்டாலும் பலன் கிடையாது என்றும் அதிபர் டி கோல் தெரிவித்தார்.

சீனா இல்லாது ஆசியாவில் எத்தகைய சமாதான ஒப்பந்தத்தையும் ஏற்படுத்த முடியாது என்றும் அதிபர் டி கோல் குறிப்பிட்டார்

### உபவாசம் இருக்க மூதாட்டி சபதம்

யாழ்ப்பாணம் ஞாயிறு

வரணி நடுக்குறிச்சி வீச் சிறுபான்மை ஐக்கிய முன்னணியின் பிரசாரக் கூட்டம் நடைபெற்றது. இக் கூட்டத்திற்கு திரு. த. சின்னர் தலைமைவகித்தார். முன்னாள் செனட்டர் ஜி. நல்லையா, திரு சே. டானியல், திரு. எம். செல்லையா ஆகியோர் பேசினர்.

கூட்டத்தில் அறுபது வயது மூதாட்டியான திருமதி. சின்னம்மா என்பவர் சத்தியாக்கிரகம் வெற்றிபெறும்வரை ஆண்டவனுக்கு 3 தடவை பூசைசெய்வதென்றும், உபவாசம் இருப்பதென்றும்சபதம்செய்துகொண்டார்.

### சிரமதானம்

சங்கானை, சனி

அண்மையில் பெய்த மழை காரணமாக நவாலியில் சேதமடைந்த வீடுகளைச் சிரமதான முறையில் திருத்தி அமைக்கும்பணியில் அவ்வூர் இளைஞர்கள் கு. இராசரத்தினம் தலைமையில் ஈடுபட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

''தெய்வமே! எனது பிரார்த்தனையை நிறைவேற்றுதீர். காரணம் என் அறியாமையிலேயே எனக்குத் தீங்கானவற்றை கேட்டு விடலாம்'' என்று பிரார்த்திப்பாருமுண்டு. அதாவது எல்லாம் அவரிடமே விட்டுவிடவேண்டும். நமக்கு எது நல்லதென்பது அவருக்குத் தெரியும்தானே

—சுவாமி ராமதாஸ்


# ஈழநாடு

EELANADU National Tamil Daily Post Box [illegible]

Telegrams : EELANADU Jaffna Telephone [illegible]

யாழ்ப்பாணம் பராபவ ஆண்டு ஐப்பசி - 14 (30-10-66)


## விவேகமான முடிவு

தேசிய அரசாங்கத்திலிருந்து இப்போதையசூழ்நிலையில் விலகுவதில்லையென்று தமிழரசுக் கட்சியின் பொதுச்சபை தீர்மானித்திருக்கிறது. அவசரப்பட்டு நிதானத்தை இழந்து விடாமல் பொதுச்சபை செய்துள்ள இந்த முடிவை தமிழ் மக்கள் மட்டுமல்ல நாட்டின் நலனில் அக்கறை கொண்டோர் அனைவரும் நிச்சயம் வரவேற்பர்.

இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்களுக்குசென்ற பத்துவருட காலத்தில் சோதனைக்கு மேல் சோதனை ஏற்பட்டு வந்திருக்கிறது. இச்சோதனைகள் பலவற்றைத்தாண்டி வந்திருக்கும் தமிழ்பேசும் சமூகத்துக்குப் புதியபுதிய சோதனைகள் தோன்றிக்கொண்டிருக்கின்றன. இவற்றை உடனடியாக சமாளிப்பது சுலபமல்ல. தமிழரசுக்கட்சி தமிழ் பேசும் மக்களின் [illegible]மைகளுக்காகப் பல [illegible]ங்களை நடத்தி, தமிழ் மக்களின் பெரும் அன்பையும் ஆதரவையும் பெற்றுள்ளது அதன் முயற்சிகளில் ஓரளவு வெற்றியும் கண்டிருக்கிறது. என்றாலும் வகுப்பு வாதத்துக்கு இடமளித்து அது பூதாகாரமாக வளர்ந்துள்ள இந்நாட்டில சிறுபான்மையினருக்கு எதிராக வகுப்புவாதக் கோஷம் அடிக்கடி எழுவது நடக்க முடியாத விஷயமல்ல. ஒரு தரப்பில் வகுப்புவாதக் கூச்சல் எழும்பொழுது மற்றத்தரப்பிலும் அதன் எதிரொலி கேட்கத்தான் செய்யும். இருதரப்பிலும் தீவிர வாதிகளிருக்கின்றனர்; இருப்பார்கள். தமிழரசுக்கட்சி தனது பொறுப்பையும் கடமையையும் உணர்ந்து அதிக நிதானமாகவும் தீர்க்க தரிசனத்துடனும் நடந்து கொள்வது எவ்வளவு அவசியமென்பதை விளக்கத் தேவையில்லை.

இன்று தமிழரசுக் கட்சியின் நிலையும் தேசிய அரசாங்கத்தின் நிலையும் நிச்சயம் பொறுமைப்படக் கூடியதல்ல. இச்சமயத்தில் இருதரப்பினருக்கும் நிதானமும் அரசியல் அனுபவமும் மிகமிக அவசியம். வகுப்புவாதத்தை சிங்கள மக்கள் இன்று ஆதரிக்கவில்லையாதலால் சிறுபான்மையினரின் உரிமைகள் சம்பந்தமாக தேசிய அரசாங்கம் சிறிது தாராள மனப்பான்மையுடன் நடந்துகொள்ள இன்று இடமுண்டு. 1956-ம் ஆண்டுக்கு முன்னர் இந்நாட்டில் தமிழ் பேசும மக்களுக்கு இருந்த உரிமைகளைத் தேசிய அரசாங்கம் சிந்தித்து. சீர்தூக்கிப்பார்த்தால் இன்று தமிழரசுக்கட்சியும், தமிழ் பேசும் மக்களும் கோரும் உரிமைகள் நியாயமற்றவையென்றோ, அதிகமென்றோ கூறமுடியாது.

'சுவர் இருந்தால் தான் சித்திரம் எழுதலாம்'. என்பது தமிழ்ப் பழமொழி. சென்ற ஒன்பதாண்டு காலத்தில் ஆட்சிப்பீடத்திலிருந்தவர்கள் தமிழ் பேசும் மக்களின் உரிமைகள் ஒவ்வொன்றும் நீங்குவதற்கும் காரணமாக இருந்தவர்களென்பதை தமிழ்பேசும் மக்கள் மறந்துவிட மாட்டார்கள். தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்டபின் நிலைமை மாறிவந்துகொண்டிருக்கிறது. இச்சமயத்தில் அரசாங்கத்திலிருந்து வெளியேறி வகுப்புவாதிகளுக்கு வாய்ப்பளிப்பதைவிட, அரசாங்கத்திலிருந்துகொண்டே தமிழ் பேசும் மக்களின் உரிமைகளைச் சட்டரீதியாகவும் நிர்வாக ரீதியாகவும் பெறமுயற்சி செய்ய வேண்டும். அதுவே அரசியல் விவேகமாகும். இந்த வகையில் தமிழரசுக்கட்சியின் பொதுச்சபை செய்த முடிவு பாராட்டத்தக்கது.

## நவசீனாவின் அணு ஆயுதம்

ஏவுகணையில் அணுகுண்டை வைத்து குறிப்பிட்ட இலக்கைத் தாக்கும் பரீட்சையொன்றை நவசீனா வெற்றிகரமாக நடத்தியுள்ளது. இது அமெரிக்கா உட்பட உலக நாடுகள் பலவற்றையும் ஆச்சரியத்திலாழ்த்தியுள்ளது.

முதலாவது அணுஆயுதப் பரீட்சையை நடத்திய இரண்டு வருடங்களின் பின் நான்காவது அணு ஆயுத பரீட்சையை அதுவும் கண்டம்விட்டுக் கண்டம் பாய்ந்து குறிப்பிட்ட இலக்கு ஒன்றைத் தாக்கக்கூடிய சக்திவாய்ந்த பரீட்சையொன்றை நடத்தியிருக்கிறது. அணு ஆயுத உற்பத்தியில் நவசீனாவும் முன்னணிக்கு வந்துள்ளதென்பதையும் இருவல்லரசுகளுக்கும் அது சளைத்ததல்ல என்பதையும் நவசீனா இதன் மூலம் எடுத்துக்காட்டியுள்ளது.

வியட்நாமில் சமாதானத்தை நிலைநாட்டுவதற்கு வாய்ப்பாக மணிலாவில் கூடிய ஏழு அரசுகள் ''வடக்கு வியட்நாம்படைகள் வாபசாகும் போது அமெரிக்கப்படைகளும் வாபஸாகும்'' என்ற தொனியில் ஆறுமாத காலத்துக்குள் இருதரப்புப்படைகளும் வாபஸ் பெறலாம்' என்று கூட்டறிக்கை வெளியிட்டுள்ள சில தினங்களுக்குள் நவசீனா, இந்த அணுஆயுதப் பரீட்சையை நடத்தியிருப்பது, வடவியட்நாம் தனது நிலையிலிருந்து பின்வாங்குவதைத் தடுக்கவும் சமரச யோசனையை ஏற்கமறுத்து தொடர்ந்து அதன் 'நடவடிக்கை'களில் ஈடுபடவும் ஊக்கமளிப்பதாக இருக்கக்கூடும்.

நவசீனாவின் அணு ஆயுத உற்பத்தி முன்[illegible] உலகில் அணு ஆயு[illegible] பத்திக்கும் அணு ஆயுத பரிசோதனைகளுக்கும் உடனடியாக முற்றுப்புள்ளி வைக்கவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துவதாக உள்ளது. ஏற்கனவே அணு ஆயுதங்களை பெருமளவில் உற்பத்திசெய்து வைத்துக்கொண்டு, பரீட்சைகளையும் வெற்றிகரமாகச் செய்துமுடித்துவிட்ட வல்லரசுகள் இனி எவரும் அணு ஆயுதங்களை உற்பத்தி செய்யக்கூடாது என்று கூறுவதால் பயன் கிடைத்துவிடுமென எதிர்பார்க்கமுடியாது. உற்பத்திசெய்யப்பட்ட அணு ஆயுதங்கள் அனைத்தையும் வல்லரசுகள் அழித்துவிட முன்வரவேண்டும். இதற்கு வல்லரசுகள் இணங்காதவரை அணு ஆயுத உற்பத்தியைத் தடைசெய்வதும், அணு [illegible]

## பொதுமக்கள் தொடர்பும் பொதுமக்கள் சேவையும்

குடியேற்ற நாட்டு ஆட்சிக்காலத்திற்கும் தற்காலத்திற்குமிடையிலுள்ள எண்ணற்ற வித்தியாசங்களைப் பொதுமக்கள் சேவையில் ஈடுபட்டுள்ள அரசாங்க ஊழியர்கள் இப்பொழுது எதிர்நோக்கவேண்டியிருக்கிறது. பொதுச்சேவையிலுள்ளவர்கள் மாறுதலடைந்துள்ள இன்றைய அரசியல், சமூக நிலைகளுக்கேற்பத் தாங்களும் மாறிக்கொள்ள வேண்டுமென்று ராஜாங்க அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு ஆனந்ததிஸா டி அல்விஸ் இக்கட்டுரையில் மிகவும் விளக்கமாகக் கூறுகிறார்.

இலங்கை பிரிட்டிஷாரின் ஆட்சியிலிருந்த போது ஓர் அரசாங்க அதிகாரிக்கிருந்த பொறுப்புக்களும், அதிகாரங்களும் இன்று எவ்வளவோ மாறிவிட்டன. அன்றைய அதிகாரிக்கு பரிபூரணமான ஆளும் அதிகாரம் இருந்தது. அவர் சட்டங்களை வகுத்தார், திட்டங்களை இயற்றினார், மாற்றங்களைச் செய்தார், அவற்றிற்கு காரணமும் காட்டினார். கொழும்பிலுள்ள ஆங்கிலேய தேசாதிபதியைத் தவிர அவரை ஏனென்று கேட்பார் எவருமில்லை.

இன்றைய அரசாங்க அதிகாரி முற்றிலும் வேறுபட்ட ஒரு சூழ்நிலையில் வேலைசெய்யவேண்டியிருக்கிறது. இவருக்கு பொறுப்புகளுண்டு. ஆனால் அதிகாரங்கள் கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றன. முன்பு அரசாங்க அதிபருக்கு ஆங்கிலேய பொதுக் காரியதரிசி ஒருவரே எஜமான். இன்று உள்ளூர் அரசியல் வாதிகள், பட்டின சபை, நகரசபை அங்கத்தவர்கள், அரசியல் செல்வாக்குள்ள சாதாரண மனிதர், உதவிக் காரியதரிசிகள் நிரந்தரக் காரியதரிசி, திறைசேரி அதிகாரிகள், பிரதம மந்திரி, நாடாளுமன்றம், பத்திரிகைகள் என்று பல எஜமானர்கள் இருக்கிறார்கள்.

அன்றைய அதிகாரி ஒரு மரத்தை வெட்டவேண்டும் என்றால் அதற்கு எதிர்ப்பேச்சுக்கிடையாது. இன்றைய அதிகாரி அம்மரத்தை வெட்டலாகாது என்று தடுத்தாரானால் கோடாலிக்கொத்து, மரத்தின் மீது மட்டுமல்ல அவருடைய கழுத்திலும் விழக்கூடும்.

இதுபோன்ற சந்தர்ப்பங்களில் காலத்திற்கேற்றவாறு நடந்துகொள்ளும் அதிகாரி வரவேற்கப்படவேண்டியவர்.

பலர் காலத்தோடு ஒத்து வாழத் தவறிவிடுகிறார்கள். இவர்களால் பொதுமக்கள் சேவைக்கே அபகீர்த்தி உண்டாகிறது. இவர்கள் நல்ல அறிவாளிகளாய் இருக்கலாம். நன்றாகப் படித்தவர்களாய் இருக்கலாம். ஆனால் அரசியல், சமூக மாறுதல்களுக்கேற்பநடந்துகொள்ள முடியாதமையினால் பொதுஜனத்தொடர்பு என்பதை விளங்கிக்கொள்ளாதவர்களாகிறார்கள்.

'எஜமானர்கள்' என்று கூறப்படுபவர்களைப் பார்ப்போம். அவர்கள் பலதரப்பட்டவர்கள். சந்தோடுக்கு உள்ளேயும் இருப்பார்கள். வெளியிலுமிருப்பார்கள். இவர் நினைத்த பிரகாரம் நடக்கும் அரசாங்க ஊழியர்கள் நல்லவர்கள். மற்றவர்கள் கெட்டவர்கள். இவர் சிபார்சு செய்த அபேட்சகர் ஒரு பதவிக்கு நியமிக்கப்பட்டால் நிர்வாகம் ஒழுங்காக நடக்கிறது. இல்லாவிட்டால் அது ஒழுங்கற்றதாகி விடுகிறது.

'எஜமானர்'களுக்கு ஆதரவாகவும் பல கூறவேண்டியிருக்கிறது. இன்று அரசாங்கம் பொதுமக்களிடையே நன்றாக ஊடுருவிவிட்டது. ஏதாவதொரு துறையில் அரசாங்கத்தின் தாக்குதல் பொதுமக்களைப் பாதித்துக்கொண்டேயிருக்கின்றது. எங்கு பார்த்தாலும் அரசாங்க காரியாலயங்களும், கோப்பரேஷன்களும், சபைகளும், சங்கங்களும் தலைதூக்கி நிற்கின்றன. நாளுக்கு நாள் உத்தியோகத் தபால்கள் அதிகமாக எழுதப்படுகின்றன. அரசாங்க சட்டதிட்டங்களும் நிரப்பப்பட வேண்டிய பத்திரங்களும் அதிகரித்துவிட்டன.

அரசாங்க ஊழியர்கள் இப்பொழுது 'தங்கள் இஷ்டப்படியுள்ள ஊழியன்' என்பதை பெரும்பாலும் மறந்துவிடுகிறார்கள். அதிகாரிகளால் வலுப்பெற்றவர்கள் பொறுப்புணர்ச்சிகளை மறந்து இறுமாப்புடன் நடக்கத் துணிகிறார்கள். ஒரு நாளில் எட்டு மணிநேரம் வேலைசெய்கிறவர்கள் அபூர்வம். ஆட்சியிலிருக்கும் அரசாங்கத்தோடு இசைந்துபோகாத அரசாங்க ஊழியர்கள் தங்கள்கடமைகளை மறந்து சொந்தவேலைகளை கவனித்துவிடுகிறார்கள்.

இதன்பலனாக எங்குபார்த்தாலும் குற்றம் கூறுதலும் மன உளைச்சலும் அதிகரித்துக்கொண்டன. எஜமானுக்கும், வேலையாளுக்கும் பொதுமக்களுக்கும் பொதுஜன சேவையாளருக்கும் பிளவுகள் அதிகரித்துக்கொண்டன. இது ஒன்றுதான் அரசாங்கத்தைப் பிடித்துள்ள பெரும்பிணி.

இந்த உராய்ஞ்சுதல் இரண்டு விதமாக வெளிப்படுகிறது ஒன்று பொதுக்கூட்டங்கள், பத்திரிகைகள் மூலமாகவும் மற்றது இரகசியமாக அரசியல் தலைவர்கள் மூலமாகவும் வெளியாகின்றது.

இது ஒருபுறமிருக்க உணவு தட்டுப்பாடு, செலவாணி தட்டுப்பாடு முதலிய ஏற்கனவேயுள்ள தட்டுப்பாடுகளுடன் சேர்ந்து நாட்டில் குழப்பத்தையும் மக்களிடையே நரம்புக்கோளாறுகளையும் அதிகரித்துவிட்டன. அரசியலில் தோல்வியுற்றவர்களும் அவர்களுடைய கூட்டத்தினரும் மனம் வெம்பி நெருக்கடியை அதிகமாக்குகின்றனர்.

இந்த சீர்கேடான நிலைமையைத் தவிர்ப்பதற்கு பொதுஜன தொடர்புமுறையொன்று திறமையாகக் கையாளப்படுதல் வேண்டும். பொதுமக்கள் பொது ஊழியரையும் பொது ஊழியர் பொதுமக்களையும

(5-ம் பக்கம் பார்க்க)

## நாடும் நடப்பும்

ஆஸ்பத்திரியிலிருக்கும் ஒவ்வொரு நோயாளியும் தனக்குத்தான் நோயின் தாக்கம் அதிகமென்றும் இதரநோயாளிகளைவிட தன்னையே டாக்டரும் மற்றும் சிப்பந்திகளும் அடிக்கடி கவனமாகப்பரிசோதனைசெய்து கவனிக்கவேண்டுமென விரும்புகிறார்; எதிர்பார்க்கிறார்.

நடமாடித் திரியக்கூடிய நோயாளியை, ஆஸ்பத்திரி இடநெருக்கடி காரணமாக கட்டிலிலிருந்து இறக்கிவிட்டு, எழுந்து உட்கார முடியாத நோயாளிக்கு இடம் கொடுத்தால், 'நான் நடந்துதிரிந்தாலும் எனக்குள்ள வருத்தத்தைப்பற்றி டாக்டருக்கும் தெரியவில்லை, மற்றவர்களுக்கும் தெரியவில்லை' என்று குறைப்படும் நோயாளர்பலர். ஆஸ்பத்திரியில்டாக்டர்கள், தாதிகள், மற்றும் சிப்பந்திகள் சிலரும் சிலசமயங்களில் தங்கள் கடமையைச் சரிவரச் செய்யவும், நோயாளரிடத்தில் அன்பாக நடந்து கொள்ளவும் தவறிவிடுவது உண்மையே. என்றாலும் நோயாளிகள் சொல்லும் குறைகள் பலவும் அவர்களை, அவர்களோடு ஆஸ்பத்திரியில் தங்கியிருந்து அறியும்போதுதான் உண்மைதெரியும். இதனால் ஆஸ்பத்திரியிலுள்ள டாக்டர்களும் சிப்பந்திகளும் எல்லோருமே கடமை தவறாது, நோயாளரின் நலனையேகருத்திற்கொண்டு சேவை புரிகிறார்களென்று சொல்லவில்லை. அவர்களிடம் குறைகளிருக்கத்தான் செய்கின்றன. நோயாளரிடமும் நோயாளரைப்பார்ப்பதற்கு ஆஸ்பத்திரிக்கு வருபவர்களிடமும் குறைகள் உண்டு.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் இடநெருக்கடி அதிகம்; அதிலும் பதினொன்காம் 'வார்டில்' இடநெருக்கடி சிலசமயங்களில் மிகமிக அதிகம். அந்த வார்டில் யாராவது தடுக்கி விழுந்தால் அவர் ஒரு நோயாளியின்மீதுதான் விழவேண்டி நேரிடும். இந்த நெருக்கடியில் டாக்டர்களிடமும் சிப்பந்திகளிடமும் அளவுக்கதிகமான பொறுமையை எப்படி எதிர்பார்க்க முடியும்?.

* * *

இந்த வார்ட்டில் பலநாட்களாக இருந்துவரும் நோயாளி ஒருவரை சில தினங்களுக்குமுன் யாரோ ஒரு பையன் ஏமாற்றிவிட்டானாம். சோடா வாங்கிவிட்டுத் திருப்பித்தருகிறேன் என்று அவரிடமிருந்த வெறும்(சோடா)போத்தலை இரவல்கேட்ட அந்தப்பையனிடம், போத்தலை உபயோகித்தபின் தனக்கும்சோடா வாங்கி வரும்படி அவர் பணமும் கொடுத்தாராம். அவன் பின்னர் திரும்பி வரவே இல்லையாம். இதைப்பற்றி அந்தநோயாளிபுகார் கூறாத பேர்வழிகளே இல்லை! அவர்நிலை அப்படி!

தினசரி காலையில் ஒவ்வொருதாதியும் ஒருவர்பின் ஒருவராக நோயாளியிடம் வந்து 'ஜுரம்' பார்ப்பது முதல் பல கேள்விகளைக் கேட்டுச் செல்வதுடன் அவரது படுக்கை 'டிக்கட்டையும்' பார்த்துச் செல்வர். ஒரு நோயாளியிடம் ஒரு தாதி ''உங்களை யாரும்(டாக்டர்) பார்த்தாரா?'' என்று கேட்டார். 'என்னை எவரும இன்னும் பார்க்கவில்லை; எனது படுக்கை 'டிக்கட்டைத்' தான்பத்துப்பேர் பார்த்திட்டினம்'' என்று நோயாளி பதிலளித்தார். அந்தத்தாதி தனது சிரிப்பை அடக்கிக்கொண்டு திரும்பிவிட்டார்.

—ஊர்சுற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'பாடசாலை முன்னேற முத்தரப்பு ஒத்துழைப்பு"

## கதம்பவிழாவில் அதிபர் பேச்சு

சங்கானை, சனி

'ஒருபாடசாலை முன்னேற வேண்டுமானால் ஆசிரியர் பெற்றோர், பழையமாணவர்கள் ஆகிய முத்துறையினரும் பூரண ஒத்துழைப்பை நல்கவேண்டியது அவசியம். அறிவுக்கண்திறந்த கல்வி நிலையத்தை வாழ்நாள் முழுவதும் மறக்காது அதன் வளர்ச்சிக்காக உழைக்க வேண்டியது பழையமாணவர் கடமையாகும். கிராமப்புறப்பாடசாலைகளை வெறுத்தொதுக்காது பொருளாதார வளர்ச்சிக்கு ஒற்றுமை நல்கவேண்டும். என பூசகரி மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற கதம்ப விழாவில் பழையமாணவர் சார்பாகப் பேசிய திரு. பொ. தில்லைநாதன் குறிப்பிட்டார்.

தலைமை வகித்து திரு மு சிவானந்தம் பேசினார்.

முதலிடம் பெற்றமாணவர் பேச்சு, இசைநிகழ்ச்சிகளும் ஆசிரியரதுபாடல்களும் சங்கீதபூஷணம் சி நடராசாவின் இன்னிசைக் கச்சேரியும் விசேட நிகழ்ச்சிகளாக அமைந்தன.

# வீட்டிலிருந்த ரேடியோ களவு; கணவன் விசாரிக்கப்பட்டார்

சாவகச்சேரி, சனி

கைதடி நுணாவிலைச் சேர்ந்த காசிப்பிள்ளை பெண் நாகம்மா; வீட்டில் தனிமையாய் இருந்தபோது யாரோ இனம்தெரியாத நாலு பேர் சென்று தாம் தபால்இலாகா அதிகாரிகள் எனக்கூறி தம்மை அறிமுகப்படுத்தி நீர் உமதுரேடியோவிற்கு லைசென்ஸ் இல்லாதுவைத்திருக்கிறீர் எம்மை வந்து எமது அலுவலகத்தில் காண். கொண்டுசெல்கிறோம் எனக் கூறிரேடியோவை எடுத்துச் சென்றனராம்.

சிறிதுநேரத்தின் பின் சந்தேகம்கொண்ட அப்பெண் மெற்படி ஆட்கள் கூறிய அலுவலகத்தில் சென்று விசாரித்தபோது அதிகாரிகள் அதுபற்றிதமக்குஎதுவுமே தெரியாதெனக் கூறியதாகவும் அப்பெண் சாவகச்சேரிப்பொலிஸ் நிலையத்திற்கு சென்று புகார் செய்ததாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதைத்தொடர்ந்து இப்பெண் தாம் சந்தேகிப்பதாகக் கூறிய அவரது கணவரை பொலிசார் கைது செய்து விசாரணை நடத்தியதாகத்தெரிய வருகிறது.

பெற்றோர் நிச்சயித்த

# திருமணத்தை விரும்பாத இளம் பெண் தற்கொலை

சாவகச்சேரி, சனி

பெற்றோர் நிச்சயித்த திருமணத்தை விரும்பாத இளம்பெண் ஒருவர் கிணற்றுள் விழுந்து தற்கொலை செய்துகொண்டார்.

இப்பரிதாப சம்பவம் சாவகச்சேரியிலுள்ள கச்சாயில் நேற்று இடம் பெற்றது.

கச்சாய் அல்லாரை தெற்கைச்சேர்ந்த வ. நாகநாதியின் 20 வயதுடைய மகளான சிவபாக்கியம் என்ற இளம் பெண்ணின் மரணம் சம்பந்தமாக நடைபெற்ற மரண விசாரணையின் போதே இவ்விபரம் தெரிய வந்தது

விசாரணையின் போது இறந்தவரின் தந்தை சாட்சியமளிக்கையில் தமது மகளுக்கு ஒரு திருமணம் பேசி ஒழுங்கு செய்யப்பட்டு இம்மாதம் 17-ம் திகதி திருமணநாள் குறிக்கப்பட்டிருந்ததாகக் கூறினர்.

காலஞ்சென்ற சிவபாக்கியம் பெற்றோருக்கு எழுதி வைத்துள்ள கடிதத்தில் 'எனக்கு இவ்வுலக வாழ்வில் வெறுப்பு ஏற்பட்டுவிட்டது' எனத் தெரிவித்திருந்தார். பெற்றோர் நிச்சயித்திருந்த திருமணத்தை இவர் விரும்பாததாலேயே. இவர் தற்கொலை செய்துகொண்டதாக விசாரணையின்போது தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரிப் பொலிஸ் சார்ஜன்ட் திரு. ஜி. எம். சி. வேலகெதரவின் உதவியுடன் ஸ்தலத்தில் விசாரணை நடத்திய சாவகச்சேரிப் பகுதி திடீர்மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். கே. திரவியநாயகம் தற்கொலையெனத் தீர்ப்பளித்தார்.

## ஸ்கந்தாவில் "பாசநிலா"

உடுவில், சனி

யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்பட்ட முதல் 16மி.மீ. தமிழ்ப்படமான "பாசநிலா" இம்மாதம் 31-ந் திகதி திங்கட்கிழமை மாலை 6 மணியளவில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் காண்பிக்க ஏற்பாடாகியுள்ளது. இப்பாடசாலை மாணவர்களின் நலனை முன்னிட்டே இக்காட்சி இங்கு காண்பிக்க ஏற்பாடாகியிருக்கிறது.

## தற்காலிக வேலைநீக்கம்

சங்கானை, சனி

சங்கானையிலுள்ள கலால் இலாகாவில் (மதுபரிபாலன) கடமையாற்றும் பிரதம அதிகாரி ஒருவர் அவரின் கீழ் கடமையாற்றும் ஒரு ஊழியரைத் தடியால் தாக்கிக்காயப்படுத்தியதாக சங்கானைப்பொலிஸாருக்கும் இலாகா மேலிடத்திற்கும் புகார் செய்யப்பட்டது. இதனைத் தொடர்ந்து இந்நிலையப் பிரதம அதிகாரி தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

## நீரில்மூழ்கி மரணம்

சாவகச்சேரி, சனி

கரம்பொன் குறிச்சி என்னும் இடத்தில்வே. கழைபன் என்பவர் குழத்தில் குளிக்கச் சென்றபோது மூழ்கி மரணமானார். சாவகச்சேரிப் பொலிசைச்சேர்ந்த கான்ஸ்டபிள் திரு. ஆர். இராமநாதன், டீ. பீற்றர் ஆகியோரின் உதவியுடன் சடுதி விசாரண அதிகாரி திரு. எஸ். கே. திரவியநாயகம் விசாரணை நடாத்தியபின் விபத்தினால் ஏற்பட்டமரணமெனத் தீர்ப்பளித்தார்

## குடிதண்ணீர்த் தட்டுப்பாடு

கோண்டாவில், சனி

இரணைதீவு அரசினர் ஆஸ்பத்திரியில் குடிதண்ணீர் வசதியில்லாமையால் நோயாளிகள் கஷ்டப்பட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. நோயாளர்கள் குடிநீர் பெறுவதற்கு ஆஸ்பத்திரியிலிருந்து எல்லைமயத் தாண்டி தூர

# உடுப்பிட்டி எம். பி சிங்களத்தில் பேசினார்

குரும்பசிட்டி, சனி

யாழ் நகரசபை மண்டபத்தில் நடைபெற்ற அகில இலங்கை பிஸ்கால் சேவையாளர் சங்க ஆண்டு விழாவில் பங்குபற்றி உரையாற்றிய உடுப்பிட்டி எம். பி திரு. மு. சிவசிதம்பரம் சிங்கள மொழியில் வெகு நீண்ட நேரம் சரளமாகப் பேசி கூட்டத்தில் குழுமியிருந்த சிங்கள ஊழியரின் பலத்த கரகோஷத்தைப் பெற்றுக் கொண்டார்.

# கான்ஸ்டபிள்களை தாக்கியதாக வழக்கு

## டாக்டருக்கு 'சம்மன்ஸ'

மாவிட்டபுரம். சனி

பலாலியைச் சேர்ந்த சந்தையா வேலுப்பிள்ளை என்பவர், சென்றவருடம் யூன் மாதம் 16-ம்தேதி கட்டுவனைச்சேர்ந்த, எஸ், தியாகராசா என்பவர் காங்கேசன் துறைப்பொலிசில்ஒரு களவு பற்றிச்செய்தபுகார் சம்பந்தமாக விசாரிக்கச் சென்ற காங்கேசன்துறைப்பொலிஸ் கான்ஸ்டபிள்களான ஜெயசேன, ஜெயதிசா ஆகிய இருவரையும் அவர்களது உத்தியோக பூர்வமான கடமைகளைச்செய்ய விடாது அவர்கள் மீது பலாத்காரப் பிரயோகித்ததாகவும், மேற்படி கான்ஸ்டபிள்கள் இருவரும் செய்தபுகார் சம்பந்தமாக விசாரிக்கச் சென்ற இன்ஸ்பெக்டர் திரு சிவபாதத்தை அவரது உத்தியோக பூர்வமான கடமைகளைச் செய்ய விடாமல் தடுத்து அவர் மீது பலாத்காரம் பிரயோகித்ததாகவும், ஜெயசேன, ஜெயதிசா ஆகிய இருகான்ஸ்டபிள்களின் பாதுகாப்பிலிருந்து அவர்கள்மீது பலாத்காரம் பிரயோகித்து தப்பி ஓடியதாகவும்' இன்ஸ்பெக்டர் திரு. சிவபாதத்தின் உடமைகளான ஒருகைக்கடிகாரம். ஒருஷேட், ஒருபெனியன், ஆகியவற்றிற்கு சேதமேற்படுத்தியதன் மூலம் அவருக்கு 94 ரூபாய்க்கு நஷ்டமேற்படுத்தியதாகவும் எல்லாமாக ஐந்து குற்றங்கள் சாட்டிக் காங்கேசன்துறைப் பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கு மல்லாகம்நீதிபதி திரு. டி. எஸ். நித்திங்கா முன்னிலையில் எடுத்துக்கொள்ளப் பட்டது.

வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்டதும் கந்தையா வேலுப்பிள்ளைக்கு எதிராக முன்னர் தாக்கல் செய்திருந்த குற்றப் பத்திரிகையை வாபஸ்பெற்றுக்கொண்டு சில திருத்தங்களுடன் புதிய குற்றப்பத்திரிகை ஒன்றை தாக்கல்செய்தார்கள். நீதிபதி அதனை ஏற்றுக்கொண்டு டாக்டர் இராசேந்திரத்துக்கு சமன்ஸ் அனுப்பஉத்தரவிட்டு வழக்கை விசாரணைக்காக ஒத்திவைத்தார். எதிரி கிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார்.

## இடமாற்றம்

உடுவில், சனி

உடுவிலில் நீண்டகாலமாக கிராம சேவகராகக் கடமையாற்றிய திரு. க. நல்லையா நவம்பர்மாதம் முதலாந்திகதி தொடக்கம் சாவகச்சேரி புலியம்பொக்கணைப்பகுதிக்கு கிராமசேவகராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். புலியம்பொக்கணைப்பகுதியில் கிராமசேவகராகக்கடமையாற்றிய திரு ச. சின்னத்தம்பி உடுவில் கிராமசேவகராக இடமாற்றம் [illegible] த் தெரியவருகிறது.

# "தொழிலாளர் ஸ்தாபனமாக தொடர்ந்து இயங்கும்"

யாழ்ப்பாணம், சனி

வடஇலங்கைக் கள்ளிறக்கும் தொழிலாளர் சங்க ஆண்டு விழா வெள்ளிக்கிழமை காலை யாழ் மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது இக்கூட்டத்துக்கு திரு. ஜே ஆர். ஜேக்கப் தலைமை தாங்கினார்.

இக்கூட்டத்தில் நடப்பு வருடத்துக்குரிய தலைவர் தேர்தலின்போது, திரு. ஜே ஆர். ஜேக்கப் மீண்டும் தலைவராகத் தெரியப்படல் வேண்டுமென்று திரு. தில்லையம்பல பிரேரிக்க திரு. முத்தையா அனுவதித்தபின்னர் அங்கத்தவர் சிலர்நடப்புவருடத்துக்குதாம்வேறொருவர் பெயரைத் தலைவராகத்தெரிந்தெடுக்கவிரும்புவதாகத்தெரிவித்தனர். இதைதொடர்ந்து தலைவரைச் சேர்ந்தவர்களும் தலைவரும் கூட்ட மண்டபத்தைவிட்டு வெளியேறி, யாழ்ப்பாணம் பலாலி வீதியிலுள்ள ஓர் இல்லத்தில் தொடர்ந்து மகாநாட்டை நடத்தினர்.

தலைவர் தமது தலைமை உரையின்போது பின்வருமாறு குறிப்பிட்டார்:

'வடஇலங்கைக் கள்ளிறக்கும் தொழிலாளர் சங்கம் 40 ஆண்டுகளுக்கு முன், தொழிலாளர் நலன் கருதி ஸ்தாபிக்கப்பட்டு கட்சிசார்பற்றவகையில் இயங்கி வந்தது. இது உண்மையான தொழிலாளரைக் கொண்ட சங்கமாக இயங்க இன்று வழிவகுத்துக் கொண்டுள்ளது. இவ்வியக்கம் தனியே தொழிலாளர்களின் ஸ்தாபனமாக இயங்கி, வருங்காலத்தில் தொழிலாளர்களின் உரிமைகளைப் பெறுவதற்கு போராடிவரும்'

அடுத்த இலங்கை தொழிலாளர் சம்மேளன வடபிரதேசத்தலைவர் திரு. வி. ஏ. கந்தசாமி பேசுகையில் சிறுபான்மைத் தமிழ் மக்கள் தமது மனித உரிமைகளுக்காகப் போராடி வருகிற இந்தச் சந்தர்ப்பத்திலே இன்று கள்ளிறக்கும் தொழிலாளர்கள் தமது உண்மையான உரிமைகளைப் பெறுவதற்கும் நலன்களைப் பாதுகாப்பதற்குமாக இதுவரை இயங்கி வந்த நிலையினின்றும் மாறுபட்டுச் செயல்புரிய இன்று முனைந்துள்ளனர் என்றார்.

திருவாளர்கள் வி எம். பொன்னையா, வே. கதிர்காமு, க. தம்பிமுத்து, ஆ. தில்லையம், கே. குமாரசாமி ஆகியோரும் பேசினர்.

இக்கூட்டத்தில் நடப்பு வருடத்துக்குரிய உத்தியோகத்தர்களாகக் கீழ்க்கண்டோர் தெரிவுசெய்யப்பட்டனர்: தலைவர்: எஸ். ஆர். ஜேக்கப், உபதலைவர்கள்: கு. ஞானப்பிரகாசம், ஆ. செல்லையா, பா. பசுபதி, வி. எம். பொன்னையா, எம். செல்லத்தம்பி, க. இராசையா, பொதுக்காரியதரிசி: வ. தி. செல்வராசா நிர்வாககாரியதரிசி: சி மு. முத்தையா, பொருளாளர்: க. தம்பிமுத்து, இ. குணரத்தினம் நிர்வாகசபை உறுப்பினர்களாக 37 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

## தேசிய சுவீப...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தலா ரூபா 520-30 சதம் பெறும் 100 டிக்கட்டுகள் வருமாறு:-

| | |
|---|---|
| 33 L 0608 | 05 H 0260 |
| 33 G 0217 | 19 L 0873 |
| 33 K 0444 | 35 U 0175 |
| 21 Q 0798 | 31 T 0911 |
| 20 U 0844 | 35 O 0061 |
| 17 R 0095 | 28 A 0562 |
| 32 B 0523 | 28 R 0737 |
| 06 D 0213 | 17 T 0466 |
| 19 Z 0922 | 33 O 0341 |
| 09 F 0629 | 16 R 0407 |
| 07 X 0639 | 40 W 0353 |
| 41 M 0467 | 12 Z 0089 |
| 05 D 0781 | 27 T 0142 |
| 30 A 0086 | 41 G 0450 |
| 12 F 0093 | 08 W 0853 |
| 23 S 0282 | 26 M 0160 |
| 16 B 0476 | 08 F 0295 |
| 15 N 0963 | 22 N 0168 |
| 32 Z 0732 | 21 B 0664 |
| 37 G 0631 | 33 X 0516 |
| 23 W 0384 | 18 U 0227 |
| 34 R 0009 | 35 G 0473 |
| 10 O 0680 | 33 P 0022 |
| 37 A 0062 | 11 J 0582 |
| 19 W 0175 | 27 H 0168 |
| 36 C 0821 | 28 K 0283 |
| 39 E 0398 | 10 G 0411 |
| 31 H 0050 | 25 T 0905 |
| 28 J 0848 | 15 V 0951 |
| 25 H 0192 | 13 G 0702 |
| 39 N 0256 | 09 M 0135 |
| 35 Q 0360 | 32 W 0648 |
| 32 T 0436 | 15 H 0176 |
| 17 H 0645 | 26 E 0988 |
| 25 X 0949 | 40 X 0177 |
| 02 O 0797 | 23 W 0011 |
| 06 Y 0565 | 05 R 0037 |
| 38 J 0179 | 14 F 0539 |
| 19 P 0323 | 28 A 0369 |
| 02 Z 0190 | 39 M 0902 |
| 35 P 0100 | 18 Y 0211 |
| 40 P 0258 | 23 P 0946 |
| 03 G 0607 | 03 G 0310 |
| 26 J 0073 | 12 T 0625 |
| 07 C 0761 | 40 R 0758 |
| 34 V 0673 | 13 R 0197 |
| 02 H 0708 | 26 S 0994 |
| 39 A 0755 | 29 K 0542 |
| 07 Q 0010 | 09 E 0181 |
| 28 Z 0170 | 06 O 0222 |

## பொதுமக்கள்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

நெற்றிக்கு நேர் சந்தித்து தத்தம்குறைபாடுகளை பகிரங்கமாக தெரிவித்து அவற்றை நிவர்த்திசெய்வதற்கு சௌஜன்னியமான முறையில் [illegible] கிக்கொள்ள வேண்டும்- [illegible] ட்டைகளும், உத்தரவுகளும் பூரண விளக்கத்துடன் கொடுக்கப் படவேண்டும்- ஒருசிலபுத்தி மான்களிடம்தான் உலகிலுள்ள ஞானம்முழுவதும் பொதிந்து கிடக்கிறதென்ற எண்ணம் மாறவேண்டும், மிகச்சாதாரண மாணவர்களிடத்திலே சிலசமயம் ஆழ்ந்த ஞானம் மண்டிக்கிடக்கும்.

முடிவில்லாத பேச்சுகளும் எல்லையில்லாத துண்டுப்பிரசுரங்களும்இதனால் ஏற்படக்கூடும். இதைஒரு பொருட்டாகக்கருதப்படாது . நாடு செழிப்புற, நாட்டுப்பற்று மேலோங்கி அபிவிருத்தித் திட்டங்கள் சித்திரமாக மேலோங்க வேண்டுமாயின் எவ்வளவு பேச்சுக்கள்நடத்தினாலும்தகும். எத்தனை கடிதங்கள் எழுதினாலும்தகும்.

## கமிட்டிக்கூட்டம் வவனியாவில்

வவனியா, சனி

தமிழரசுக்கட்சியின் அடுத்த கமிட்டிக்கூட்டம் வவனியாவில் நடைபெறும். அடுத்தவாரம்வவனியா தமிழரசுக் கிளைக்காரியாலயத்தில் நடைபெறும் இக்கூட்டத்தில் பொதுச்செயலாளர் திரு. அமிர்தலிங்கம் கலந்து கொள்வார்.

## கோண்டாவில் பொலிஸ்நிலையம்

கோண்டாவில், வெள்ளி

கோண்டாவிலுக்கு பொலிஸ்நிலையம் அமைக்கப்படலாமெனவும் இதற்கான இடம் இன்னும் தெரிவுசெய்யப்படவில்லையெனவும்தெரியவருகின்றது. உத்தேசபொலிஸ்நிலையம் கோண்டாவில் மத்திய பஸ்நிலையத்திற்கு முன் அமைக்கப்படலாமென முன்பு கருதப்பட்டது. எனினும் அதுபற்றி இன்னும்ஒரு முடிவும் செய்யப்படவில்லையெனத் தெரியவருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தச் சிறுமிகள்

# -முற்பிறவி பற்றி -பேசுகிறார்கள்....!

—கே. நடராசா—

'டொனு' இப்பொழுதெல்லாம் மிகத் தெளிவாகவும், விரிவாகவும் தன் முற்பிறவிபற்றி பேசி வருகிறார். ஆனால் அவர் சொல்லும் விஷயங்கள் ஆராயப்பட வேண்டியிருப்பதால் அவை வெளியிடப்படாமல் மறைக்கப்படுகின்றன.

## சாந்தினி

முற்பிறவிபற்றிப் பேசும் மற்றப்பெண்ணுக்கு இரண்டரை வயது. பெயர் சாந்தினி. பதுளையைச் சேர்ந்தவர்.

கடல், கடற்பிரயாணம், வள்ளங்கள் இவைபற்றித்தான் அவர் அதிகம் பேசுகிறார். ஆனால் அந்தப் பெண் தன் வாழ்வில் இதுவரை கடலையே பார்த்ததில்லை என்று அவருடைய தகப்பனும் தாயும் கூறுகிறார்கள். தகப்பன் அரசாங்கத்தில் குமாஸ்தாவாகவும், தாய் ஆசிரியத்தொழிலிலும் இருக்கிறார்கள்.

தின்படி முற்பிறவியின் தலவாசகலையக் டியிரின் திலகரத்ன என்ற பெயரை உடையவராக அவர் இருந்துள்ளார்.

## குடும்பம்

டியுரின் ஏழு பெண்பிள்ளைகளையுடைய ஒரு குடும்பத்தில் ஒரே ஆண்பையன். அவர் 1941ம் ஜனவரிமாதம் 20ந் திகதி பிறந்து 1954ம் ஆண்டு நவம்பர் 9ம் திகதி மரணமானார், அவர்கள்வீட்டில் இருந்த ஒரு நீண்ட படிக்கட்டிலிருந்து விழுந்ததினால் மரணமானார். ஞானதிலக்கதனது முற்பிறவியின் போது நடந்ததாகக் கூறும் சம்பவங்களில் 1954ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் எலிஸபெத் மகாராணியார் தலவாக்கொல்லைக்கு விஜயம் செய்த சம்பவம் பற்றியது தெளிவாக இருக்கின்றது.

இவரின் இந்தக்கூற்றுமுற்பிறவிபற்றிய விஞ்ஞான ரீதியான ஆராய்ச்சிக்கு முதல்

குறிப்பு:

முற்பிறவி பற்றிய இக்கட்டுரை இந்த வாரத்துடன் முடிவுறுகின்றது. இக்கட்டுரையில் கூறப்பட்டது போன்ற சம்பவங்கள் வேறு இடங்களிலும் இடம் பெற்றிருக்கலாம். 'பொன் வயல்' வாசகர்கள் தமக்குத் தெரிந்த நிகழ்ச்சிகளைப் பற்றி எழுதினால் பிரசுரிக்கப்படும். இக்கட்டுரை பற்றிய கருத்துக்களும் வரவேற்கப்படுகின்றன.

## முற்பிறப்பில்

இந்தப் பெண்ணுக்கு கடலைப் பற்றியும், கடல்பிரயாணங்களைப்பற்றியும் எப்படி பேசமுடிகிறது. கடற்கரைப் பிரபல்தசமான அலுத்கமையில் பியசிலி என்ற எட்டு வயதுப்பெண்ணாக முற்பிறவியில் இருந்ததாக இவர் கூறுகின்றார்.

ஒரு பெரிய ஆற்றின் கழிமுகத்தின் அருகில் கடற்கரையில் எங்கள் வீடு இருந்தது. வள்ளங்களில்ஏறி கடலில் நாங்கள் மணிக்கணக்கில் பிரயாணம் செய்து மகிழ்வோம். வீட்டுக்கடுத்தாற் போலவே ஒரு கோவில் இருந்தது? எங்களின் பழைய வீடு கடல்அரிப்பால் அழிந்து போயிற்று. அதனால் நாங்கள் புதிதாகவீடொன்றைக் கட்டினோம். தோட்டத்தில் ஏராளமான பழ மரங்கள் இருந்தன. எனதுதகப்பனாரிடம் பழைய கார் ஒன்றும் இருந்தது. டாக்டரிடம் அவர் என்னை அதில் எடுத்துச் செல்வார். என் இளைய சகோதரியுடன்நான்பள்ளிக்குப் போவேன். ஒருபாலத்திலிருந்து ஆற்றில் விழுந்ததால் அவள் ஆழ்ந்து போனாள். போதில் விளக்கொன்றினால் என் உடுப்பில் தீ பிடித்ததின் காரணமாக நான் மரணமானேன்''.

இவ்வாறு சாந்தினி தன் முற்பிறவிபற்றி கூறுகின்றார் சாந்தினி பிறப்பதற்கு சுமார் 10 மாதங்களுக்கு முன்பாக பியசிலியின் மரணம் சம்பவித்ததாகக்கூறப்படுகின்றது.

டொனுவும் சாந்தினியும் தமது முற்பிறவி பற்றிப் பேசுவது ஜனங்கள் மத்தியில் ஒருவித பரபரப்பை ஏற்படுத்தியிருந்தாலும் இலங்கையில் இது புதிய சம்பவமல்ல.

## இன்னொரு பெண்

குமுதினிஞானதிலக்க என்பது இன்னொரு சிறுமியின் பெயர். கொத்மலி என்ற இடத்தைச் சேர்ந்தவர். அவர் 4 வயதாய் இருக்கபோது 1960ம் தமது முற்பிறப்பு பற்றி சொல்ல ஆரம்பித்தார். இவர் சொல்வ

முறையாக உதவியிருக்கின்றது. இதுபற்றி பேராசிரியா ஸ்டீவன்சன் விளக்குகையில், சாட்சியபூர்வமானதாகவும் மனோதத்துவரீதியான விளக்கமுடையதாகவுமிருக்கின்றதென்று கூறியுள்ளார் இந்தியாவில் சுமார் 15 பேரை பரிசீலனை செய்திருக்கின்றேன். ஆனால் ஞானதிலக்க விஜயம் அதிகவனத்தை ஈர்ப்பதாய் இருக்கின்றது என்றும் அவர் கூறியிருக்கின்றார்.

ஞானதிலக்கவுக்கு இப்போது 12 வயது. சாதாரண வாழ்க்கை நடத்துகின்றார். மற்ற இரு பெண்களையும் விட இவர் தமது முற்பிறவி பற்றி குறைவாகவே பேசுகின்றார். இம்மாதிரி முற்பிறவி பற்றிப் பேசும் சம்பவங்கள் இலங்கை-இந்தியா நாடுகளில் மட்டுமல்ல அமெரிக்கா, ஐரோப்பா ஆகிய நாடுகளிலும் இடம்பெறுவதாக செய்திகள் கிடைக்கின்றன. இவைகளில் இங்கிலாந்தில் நோர்த்தம்ஸ்டன் பகுதியைச் சேர்ந்த பொல்லக் இரட்டையர்கள் பற்றிய செய்தி ருசிகரமானது.

(8-ம் பக்கம் பார்க்க)

## இந்தியாவின் தினசரிபத்திரிகைகள்

இந்தியாவில் 300 தினசரிப் பத்திரிகைகள் வெளிவருகின்றன. இவைகளின் மொத்தம் விநியோக எண்ணிக்கை 3,000,000. டைம்ஸ் ஆப் இந்தியா மாத்திரம் 100,000 விநியோகமாகின்றது. மிக அதிக விற்பனையாகும் இந்திய மொழி பத்திரிகை(கல்கத்தா) 'ஆனந்த பஸார் பத்திரிகா'வாகும். சர்வதேச பத்திரிகை ஸ்தாபனம் 1953-ம் ஆண்டில் நடத்திய விரிவான ஆராய்ச்சியின் போது இத்தகவல்கள் வெளியாகின. இந்தப் புள்ளி விபரம் இப்போது மாறியிருக்கலாம்.

## வருங்கால மனைவி

ஓர் இளைஞனின் கனவு இப்படி இருக்கிறது. ஒருவேளை அது நேர்மாறாக நிதர்சனவாழ்வில் அமைந்துவிடலாம். பாவம்...... உங்கள் ஆசை என்ன எழுதுங்கள்.

விரலுக் கேற்ற வீக்கம் என்பார்களே, அதுபோல் என் நிறை குறைகளுக்கு ஏற்றவாறு அமையக்கூடிய பெண் ஒருத்திதான் எனக்கு மனைவியாக அமைய வேண்டும்.

என்னிலும்பார்க்க இரண்டொரு வயது குறைந்தவளாக இருந்துவிட்டால் மட்டும் போதாது, உயரத்திலும் அப்படித்தான். அதற்காக குள்ளக்கத்தரிக்காயாக இருக்கவேண்டாம். கறுப்பும் வேண்டாம் சிவப்பும் வேண்டாம், மாநிறமாக இருந்தால் போதும். பெண்களுக்கு, கண்கள் கவர்ச்சியாக இருக்க வேண்டும் என்று சொல்வார்கள். ஆனால் என் வருங்கால மனைவியின் கண்கள் மானின் கண்களைப்போல் அழகாய் இருக்காவிட்டால் பறவாய் இல்லை, என்றாலும் நிச்சயம் ஆந்தைக்கண்களாக இருக்கப்படாது.

சமையலதுறையில்நளமகாராஜனுக்கு சவால் விடும் அளவுக்கு திறமை படைத்திருக்க வேண்டியதில்லை. ஏதோ வாய்க்கு ருசியாக அவித்துப் போட்டால் போதும்.

வீட்டுக்கு அவள்தான் அதிகாரி என்றாலும் என் ஆலோசனைகளை அவசியமானபோது நாடவேண்டும்.

நான் ஏதாவது தவறிழைத்துவிட்டால் அதை நேரடியாக நல்லமுறையில் சொல்லித்திருத்த முனையவேண்டுமே யல்லாமல், தன் தாயார் வீட்டுக்கு ரகசியமாக தகவல் தெரிவித்து, அங்கிருந்து படைதிரட்டி போர் முரசம் கொட்டு பவளாக இருக்கப்படாது. சதா தன் குடும்பத்தைப் பற்றியே கதை அளந்து கொண்டிருப்பதை 'சமாதான சகவாழ்வு' தத்துவத்தில் அடிப்படையில் ஓரளவுக்கு அனுமதிக்கலாம். ஆனால் என் குடும்பத்தின் நிறைகுறைகளைக் குத்திக்காட்டி 'கெடுபிடி' யுத்தம் நடத்துவது சகித்துக் கொள்ள முடியாது.

பின்தூங்கி முன் எழும் பேதையாக இருக்கவேண்டும் என்று கட்டாயமில்லை. ஆனால் முன் தூங்கி பின் எழுந்து என் கையால் காப்பி எதிர்பார்க்கும் அளவுக்கு 'சுறுசுறுப்பு' உள்ளவளாக இருக்கப்படாது, 'நீங்கள் இன்றி எனக்கு வாழ்வு இல்லை' என்று சினிமா வசனம் பேசும் அளவுக்கு அவள் கற்றிருக்க வேண்டும் என்றுநான் எதிர்பார்க்கவில்லை. வீட்டு வரவு-செலவுகளை ஓரளவுக்கு கச்சிதமாக வைத்துக்கொள்ளத் தெரிந்தால் போதும்.

என்னோடு பழகுவதில் பூனைக்குட்டியைப் போலவும் பேச்சில் (குரல்) கிளி பிள்ளையைப்போலவும் இருக்க வேண்டும் என்று இல்லை. ஆனால் அண்டங் காக்கையைப் போல் இருக்கவேண்டாம்.

# பொன் வயல்

## ஐ. நா. பொதுசபையின் மனிதஉரிமைகள் பிரகடனம்

ஐ. நா. பொது சபையின மனித உரிமைகள் பிரகடனத்தின் 22 பிரிவுகள் கடந்த வாரங்களில் வெளியாகின. இவ்வாரம் மிகுதியான பிரிவுகள் பிரசுரமாகின்றன. மொழி பெயர்த்தவர் —பேனு—

பிரிவு. 23. தொழில்

(1) தொழில் செய்வதற்கும், தொழிலை சுதந்திரமாகத் தெர்வு செய்துகொள்வதற்கும், நியாயமும், சாதகமுமான தொழில் சூழ்நிலைகளை ஏற்படுத்திக் கொள்வதற்கும், வேலையிழப்புக்கெதிரான பாதுகாப்புக்கும் ஒவ்வொருவரும் உரிமையுடையவராவர்.

(2) சமவேலைக்கு சமசம்பளம் பெறும் உரிமைக்கு பாகுபாடு ஏதுமின்றி ஒவ்வொருவரும் உரிமையுடையவராவர்,

(3) தொழில் புரியும் ஒவ்வொருவரும், அவசியமென்றால் சமூகபாதுகாப்புக்கான இதர சலுகைகளுடன், தானும் தன் குடும்பமும் மனிதாபிமானத்துடன் வாழ்வதற்கு தேவையான, நியாயபூர்வமான, தமக்கு சாதகமான வேதனம் பெறுவதற்கு உரிமையுடையவராவர்.

(4) தமது நலவுரிமைகளைப் பாதுகாத்துக் கொள்வதற்காக தொழிற் சங்கங்களை அமைப்பதற்கும், அவைகளில் சேர்ந்து கொள்வதற்கும் ஒவ்வொருவரும் உரிமையுடையவராவர்.

பிரிவு 24. ஓய்வு

நியாயமான வேலைநேர நிர்ணயம், சம்பளத்துடன் கூடிய தவணை விடுமுறைகள் உட்பட, ஓய்வு, அவகாசம் பெறுவதற்கு ஒவ்வொருவரும் உரிமையுடையவராவர்.

பிரிவு 25. வாழ்க்கைத்தரம்

(1) உணவு, உடை, வீடு, வைத்தியம், அவசியமான சமூக சேவைகள் உட்பட தனதும் தன் குடும்பத்தினதும் சுகாதாரத்துக்கும் நல்வாழ்வுக்குமே போதுமான வாழ்க்கைத் தரம் பெறுவதற்கு ஒவ்வொருவரும் உரிமையுடையவராவர். தொழில் இல்லாதபோது நோய்வாய்ப் படும்போது, வலது குறையும் போது, கைமையுறும் போது, வயோதிபத்தில் அல்லது தனது சக்திக்குட்படாத சூழ்நிலைகளில் ஏற்படும் வாழ்க்கை தேவைகளின் போது பாதுகாப்பு பெறுவதற்கு ஒவ்வொருவரும் உரிமையுடையவராவர்.

(2) தாய்மாரும், குழந்தைகளும் விசேஷக் கவனிப்புக்கும், உதவிக்கும் பாத்திரமானவர்களாவர். விவாகத்தின் வாயிலாக அல்லது புறம்பாகப் பிறந்த சகல குழந்தைகளும் ஒரேவிதமான சமூகப் பாதுகாப்பை அனுபவிப்பவர்களாவர்.

பிரிவு 26. கல்வி

(1) கல்வி அறிவுக்கு ஒவ்வொருவரும் உரிமையுடையவராவர். ஆரம்ப, அத்தியாவசிய நிலைகளிலாவது கல்வி இலவசமாகப் போதிக்கப்படுவதாகும் தொழில் நுட்பக் கல்வியும் உயர்தரத் தொழில் கல்வியும், எல்லாருக்கும் பொதுவாக கிடைக்கக் கூடியதாகவும், தகுதிக்கேற்றவாறு மேற்படிப்புக்கான சமவசதி எல்லோருக்கும் கிடைக்கக் கூடியதாகவும் இருக்கப் பெறும்.

(2) புருஷத்தன்மையின் முழுவளர்ச்சிக்கும் பயன்படும் வகையிலும் மனித உரிமைகள், அத்தியாவசிய உரிமைகளுக்கிருக்கும் மரியாதையை ஸ்திரப் படுத்தவும் கல்வியின்நோக்கம் திருப்பப்படல் வேண்டும். சகல நாடுகள் இன அல்லதுமதப்பிரிவினர் மத்தியில் நல்லெண்ணம், சகிப்புத்தன்மை நட்புறவுகளை வளர்க்கவும், சமாதானத்தை நிலைநாட்டுவதற்கான ஐ நா.வின் நடவடிக்கைகளை விரிவுபடுத்தவும் இது உதவுவதாகும்.

(3) தம்குழந்தைகளுக்கு என்ன கல்விபுகட்ட வேண்டுமென்று தெரிவு செய்வதற்கு பெற்றோர் முதலில் உரிமையுடையவராவர்.

பிரிவு 27

1. சமூகத்தின் கலாசார வாழ்வில் சுதந்திரமாக பங்கு கொள்ளவும், கலைகளை அனுபவிக்கவும், விஞ்ஞான வளர்ச்சியிலும், அதன் பலன்களிலும் பங்கு பெறவும் ஒவ்வொருவரும் உரிமையுடையவராவர்.

2. தாம் உருவாக்கும் விஞ்ஞான, இலக்கிய, அல்லது கலைகள் சம்பந்தப்பட்ட படைப்புகளின் பயனாக ஏற்படும் தார்மீக, பொருள் பாதுகாப்புக்கு ஒவ்வொருவரும் உரிமையுடையவராவர்.

பிரிவு 28 தீர்ப்பு

சமூக, சர்வதேச தீர்ப்பொன்றுக்கு ஒவ்வொருவரும் உரிமையுடையவராவர். இதன்படி, இந்தப் பிரகடனத்தில் இடம்பெற்றுள்ள உரிமைகள், சுதந்திரங்களை பூரணமாக அடைதல் சாத்தியமாகும்.

பிரிவு 29 கடமைகள்

1. சமூகத்துக்காற்ற வேண்டிய கடமைகள் ஒவ்வொருவருக்கும் உண்டு. இதன் மூலம் மட்டுமே புருஷத்தன்மையின் முழு வளர்ச்சியும் சாத்தியமாகும்.

2 மற்றவர்களின் உரிமைகள், சுதந்திரங்களுக்குரிய அங்கீகாரமும் மரியாதையும் ஏற்படுத்தும் ஒரே நோக்கத்தோடும், ஜனநாயக சமுதாயத்தின் தார்மீகத் தன்மைகள், பகிரங்க ஒழுக்குகள், பொது நலன்கள் ஆகியவற்றின் காரணமாக எழும் நியாயமான சேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்கும் சட்டத்தால் நிர்ணயிக்கப்பட்டுள்ள அளவுக்கு மட்டுமே ஒருவர் தம் உரிமைகள் சுதந்திரங்களைப் பயன்படுத்தலாம்,

3. இந்த உரிமைகளையும் சுதந்திரங்களையும் ஐக்கிய நாடுகளின் நோக்கங்கள் கொள்கைகளுக்கு எந்த வகையிலும் முரண்பாடாக பயன்படுத்துவதாகாது.

பிரிவு 30 வியாக்கியானம்

எந்த ஒரு ராஜ்யத்தை, குழுவை அல்லது நபரை உட்படுத்துவதாக அல்லது ஏதாவது நடவடிக்கையில் இறங்க ஏதாவது உரிமை அளிப்பதாக அல்லது இதன் மூலம் குறிக்கப்பட்டுள்ள எந்தவொரு உரிமையை அல்லது சுதந்திரத்தை பாழாக்கும் நோக்கத்துடனான எந்தவொரு நடவடிக்கையையும்மேற்கொள்வதற்காக இந்தப் பிரகடனத்தில் எதுவும் வியாக்கியானம் செய்யப்படலாகாது. (முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடேஸ்வராவின் அபார விளையாட்டு

## 'பி' பிரிவில் நடேஸ்வராவும், கனகரத்தினமும் தெரிவு சாம்பியன்களாகின

யாழ்ப்பாணம், சனி

யாழ். பாடசாலை விளையாட்டுச்சங்கத்தின் ஆதரவில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற 1-ம் பிரிவுகளுக்கான போட்டியில் 'பி' பிரிவுப் போட்டியில் இதுவரை நடைபெற்ற போட்டிகளின்படி நல்லூர் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயமும் காங்கேசன்துறை நடேஸ்வராக்கல்லூரியும் பிரிவுச் சாம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இவ்விரு கோஷ்டிகளுக்கிடையேயான சாம்பியன் போட்டி எதிர்வரும் 3-ந் திகதி யாழ். விளையாட்டரங்கில் நடைபெறும்.

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரிக்கும் நடேஸ்வராக் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற இறுதிபோட்டியின் பின்னரே நடேஸ்வரா பிரிவுச் சாம்பியனானது.

இப்போட்டி ஆரம்பத்தில் இருந்து முடிவு வரையும் விறுவிறுப்பாகவும் காரசாரமானதாகவும் காணப்பட்டது. இப்போட்டியில் நடேஸ்வரா ஆரம்பத்தில் இருந்தே பலமாக மோதி சாவகச்சேரியைத் திண்டாட வைத்தது. சாவகச்சேரியும் விட்டுக்கொடுக்காமல் விளையாடியது. நடேஸ்வரா முன்னணி வீரர்களின் 'பாசிங்' விளையாட்டு ரசிக்கத்தக்கதுபாராட்டக்கூடியதாகவும் இருந்தது துரிதமாக முன்னேறி பந்துகளை விளாசித்தள்ளினர். இதன்பயனாக பல கோல்கள் அடிக்கும் சந்தர்ப்பங்களைப் அவர்கள் பெற்றனர். தேவராசா என்னும் முன்னணி வீரர் மின்னல் வேகத்தில் ஒரு கோலை விளாசினார். அந்த அபாரமான அடிக்கு ரசிகர்களின் பலமான "அப்ளாஸ்" கிடைத்தது. ஆனால் [illegible] பிளந்தது டிறிபேக் கோஷ்டியின் முன்னணி வீரர்களின் கோல் அடிக்கும் முயற்சிகளை நடேஸ்வரா பின்னணி வீரர்களால் முறியடிக்கப்பட்டன.

இடைவேளையின்போது டிறிபேக் கல்லூரி ஒரு கோலாலும் பெறாத வகையில் நடேஸ்வரா ஒரு கோல் பெற்றிருந்தது. இடைவேளைக்குப் பின் போட்டியின் தரம் முன்னேற்றமாகக் காணப்பட்டது. இரு சாராரும் கடுமையாக மோதினர். நடேஸ்வராவின் முன்னணி வீரர் ஆனந்தராசா மற்றொரு கோலை மின்னல் வேகத்தில் வெளுத்து வாங்கினார். நடேஸ்வராவின் நிதானமான 'பாசிங்' விளையாட்டு பாராட்டுக்குரியது. டிறிபேக் கோஷ்டியின் முன்னணி வீரர்களின் சுறுசுறுப்பான ஆட்டம் அருமையானது. இப்போட்டி முடிவில் நடேஸ்வரா 2-0 கோல்களால் டிறிபேக் கல்லூரியைத் தோற்கடித்தது.

### கனகரத்தினம் வெற்றி

நல்லூர் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்துக்கும் வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரிக்குமிடையேயான தெரிவுச் சாம்பியன் போட்டி ஆரம்பத்தில் இருந்து காரசாரமானதாகக் காணப்பட்டது. கடுமையான போட்டியின் பின்னரே கனகரத்தினம் கோஷ்டி சிதம்பராவைத் தோற்கடித்தது. இப்போட்டியில் இடைவேளைக்கு முன் சிதம்பராவின் கட்டம் அவ்வளவு சோபிக்கவில்லை. கனகரத்தினம் கோஷ்டியினர் அலை அலையாக வந்து எதிர்க்கோஷ்டியுடன் மோதினர். முன்னணி வீரர்களுக்கிடையே அருமையான 'பாசிங்' விளையாட்டு காணப்பட்டது. இதன்பயனாக இம்மனுவல் என்னும் முன்னணி வீரர் மின்னல் வேகத்தில் தமது முதலாவது கோலை உதைத்தார். இடைவேளையின் போது சிதம்பரா ஒன்றும் அடியாதவகையில் கனகரத்தினம் ஒரு கோலை அடித்திருந்தது. இடைவேளையின் பின் இரு கோஷ்டிகளினதும் ஆட்டம் அருமையானது. விட்டுக்கொடுக்காமல் பலமாக மோதினர். இதன்பயனாக இருகோஷ்டியும் தலா ஒவ்வொரு கோல் பெற்றன. கனகரத்தினம் கோஷ்டிக்கு இம்மனுவல் கோல் அடித்திருந்தார். இப்போட்டி முடிவில் கனகரத்தினம் 2-1 கோல்களால் சிதம்பராவைத் தோற்கடித்து பிரிவுச்சாம்பியனானது. கனகரத்தினம் கோஷ்டியின் சுதேசநாதனின் சுறுசுறுப்பான ஆட்டம் ரசிக்கக்கூடியதாகவிருந்தது.

---

## கிராம சேவகர் விபத்தில் சிக்கினார்

சாவகச்சேரி, சனி

மட்டுவில்புத்தூர் வீதியில் ஓர் இராணுவ ஜீப்புடன் மோதிக்கொண்ட கிராம சேவகர் ஒருவர் படுகாயங்களுக்குள்ளானார். இவர் உடனே இராணுவத்தினரால் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.

# சென் ஜோன்ஸின் அமோக வெற்றி

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும் யாழ். மத்தியகல்லூரிக்குமிடையே நடைபெற்ற சிநேகிதபூர்வமான, 1-ம் 2-ம் பிரிவுகளுக்கிடையேயான உதைபந்தாட்டப் போட்டிகளில் இரு பிரிவிலும் சென். ஜோன்ஸ் வெற்றியீட்டியது.

முதலில் நடைபெற்ற 2-ம் பிரிவுப்போட்டி மிகவும் விறுவிறுப்பாக ஆரம்பமானது. இருசாராரும் கடுமையாக மோதிக்கொண்டனர். போட்டி ஆரம்பமான 10 நிமிடத்தில் மின்னல் வேகத்தில் மத்தியகல்லூரியின் முன்னணிவீரன் நடராசா ஒரு கோலை போட்டார். இந்தக் கோலின் எதிரொலி அடங்கு முன் சென். ஜோன்ஸ் வீரர் ராஜமோகன் ஒரு கோலை வெளுத்து வாங்கினார். சூட்டோடுசூடாக வாமசிவன் என்னும் சென். ஜோன்ஸ் முன்னணி வீரர் மற்றொரு கோலைப் போட்டு ரசிகர்களுக்கிடையே ஒரு பெரும் பரபரப்பை ஏற்படுத்தினார். இடைவேளையின்போது மத்தியகல்லூரி ஒருகோலும் சென். ஜோன்ஸ் 3 கோலும் பெற்றிருந்தன. இடைவேளையின் பின்னர் போட்டி உச்சக்கட்டத்தை அடைந்தது. ராஜமோகன், வாமதேவன் என்னும் சென் ஜோன்ஸ் வீரர்கள் மேலும் இரு கோல்களைப் போட்டனர். மத்திய கல்லூரியும் மின்னல் வேகத்தில் ஒரு கோலைப் போட்டுக்கொண்டது. இப்போட்டி முடிவில் சென். ஜோன்ஸ் 5-2 கோல்களால் மத்தியகல்லூரியை வெற்றியீட்டியது.

இதன்பின்னர் ஆரம்பமான 1-ம் பிரிவு போட்டி ஆரம்பத்தில் இருந்து விறுவிறுப்பாகவிருந்தது. இருசாராரும் அற்புதமாக ஆடினர். இடைவேளைக்கு முன்னர் நடைபெற்ற மோதல் பெரும் மோதலாகவிருந்தது. மின்னல் வேகத்தில் பந்து அங்கும் இங்குமாக சுற்றிச் சுழன்றது. சென். ஜோன்ஸ் வலது முன்னணி வீரர் விநாயகமூர்த்தியின் ஆட்டம் பாராட்டக்கூடியது. கோல்களைப் போடுவதில் திறமையாக ஈடுபட்டார்

(8-ம் பக்கம் பார்க்க)

---

## புனிதவளன் வெற்றி

திருநெல்வேலி, ஞாயிறு

யாழ்ப்பாணம் உதைபந்தாட்டச் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்றுவரும் நொக்கவுட் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் நேற்றுமுன்தினம் புனிதவளன் விளையாட்டுக் கழகமும் ஜொலிஸ்டார்ஸும் மோதின.

ஆரம்பத்திலிருந்து முடியும் வரை விறுவிறுப்பாக இருந்த இப்போட்டியில் புனிதவளன் 2—1 கோல்களால் வெற்றியீட்டியது. இக்கோஷ்டியைச் சேர்ந்த சந்தியா, பெனடிக்ட் ஆகியோர் இரு கோல்களையும் போட்டனர்.

[illegible]. எம். வாதநோன் மத்தியஸ்தம் வகித்தார்.


உலக முன்னணியில் நிற்கும்

"ரோபியலக்"

பெயின்ற் வகைகளை




*Robbialac for beautiful homes !*

உங்களுக்குச் சமர்ப்பிப்பதில் நாங்களும் கலந்து பெருமிதமடைகிறோம்.

**ROBBIALAC**

விநியோகஸ்தர்கள்:

தி மலாயன் றேடிங் கம்பனி
(சிங்கப்பூர் கம்பனி)
128—130, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

கே. கே. சுப்பிரமணியம்
மெயின் வீதி, பருத்தித்துறை.

ஏக விநியோகஸ்தர்கள்:

**நந்தி இன்டஸ்றீஸ் & ஏஜென்ஸீஸ் லிமிட்டெட்**

20, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7256


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறந்தவர் கர்ப்பிணி என்று பெற்றோருக்கு தெரியாதாம்

மாவிட்டபுரம், சனி

மகளின் மரணத்தின் போதுதான் அவர் ஆறுமாத கர்ப்பிணி என்பது பெற்றோருக்குத் தெரிந்த சம்பவம் வசாவிளானில் நிகழ்ந்துள்ளது.

வசாவிளானைச் சேர்ந்த பாலன் சுந்தரி (18 வயது) என்பவரின் மரணம் குறித்து காங்கேசன்துறைத் தொகுதி திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. ஏ. குமரகுரு நடத்திய விசாரணையின்போது காலம் சென்ற பெண் திடீரென வாந்தி எடுத்ததாகவும் காங்கேசன்துறை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதாகவும் வலிப்பு ஏற்பட்டு மரணமானதாகவும் சாட்சியங்கள் தெரிவித்தன. டாக்டர் வி. சண்முகநாதன் சாட்சியமளிக்கையில், இறந்த பெண்ணை தாம் பரிசோதித்ததாகவும் அவர் ஆறுமாதக் கர்ப்பிணி என்றும் கர்ப்பம் சிதைந்ததால் மரணம் சம்பவித்ததென்றும் கூறினார்.

பெண்ணின் பெற்றோர் சாட்சியமளிக்கையில் தங்கள் மகள் கர்ப்பிணி என்பது தங்களுக்கு முன்னர் தெரியாதென்று கூறினர். இயற்கை மரணம் என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

## தமிழரசு தீர்மான

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

றும், அதனால் அரசாங்கத்தின் நிலைமை பலவீனமாகக் கூடும் என்றும் எதிர்த்தரப்பில் எதிர்பார்க்கப்பட்டது. 'குட்டி' பொதுத் தேர்தலில் யு. என். பி. கட்சியினர் தோல்வியுற்றதற்கு தமிழரசுக்கட்சியினர் தான் காரணம் என்றும் சிலர் பிரசாரம் செய்தனர். இந்தக்கருத்து அரசாங்க வட்டாரங்களிலும்கூட நிலவியதாக செய்திகள் கூறின. ஆனால் எதிர்க்கட்சியினர் ஏமாறும் விதத்தில் அரசாங்கத்தைவிட்டு விலகுவதில்லையென்று தமிழரசுக்கட்சியினர் செய்துள்ள முடிவு பிரதமரையும் அவர் சார்பானவர்களையும் மகிழ்ச்சிக்குள்ளாக்கியுள்ளதாகத் தெரிகிறது.

## சென். ஜோன்ஸ்...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

இப்போட்டி முடிவில் சென் ஜோன்ஸ் 3-0 கோல்களால் மத்திய கல்லூரியை வெற்றியீட்டியது. யாழ். மத்திய கல்லூரியில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு. கணேசலிங்கம் மத்தியஸ்தம் வகித்தார்.

## முற்பிறவிபற்றி...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

### பேராசிரியர் விஜயம்

இலங்கைக்கு விரைவில் வரவிருக்கும் பேராசிரியர் ஸ்டீவன்சன் டொறு, சாந்தினி ஆகியவர்களை பரிசீலனை செய்யவிருக்கின்றார். அவருடைய கண்டுபிடிப்புகள் மிகவும் ருசிகரமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (முற்றும்)

## சதிவழக்கு விசாரணை

கொழும்பு, சனி

1966-ம் வருடம் பெப்ரவரி மாதத்தில் தேசிய அரசாங்கம் வீழ்ச்சியடையுமென்றும் இலங்கையிலுள்ள மக்களில் மூன்றில் ஒருபகுதியினர் மரணமாவார்கள் என்றும் நானும் நீரும் சண்டை செய்யவேண்டி நேரிடும் என்றும் எட்டாம் எதிரியான சார்ஜன்ட் பண்டாரா தம்மிடம் கூறியதாக கார்ப்பரல் மகேந்திரராஜா இன்று சதிவழக்கு விசாரணையின்போது சாட்சியமளிக்கையில் தெரிவித்தார்.

இது ஒரு சாஸ்திரக் கணிப்பு என்றும் பண்டாரா தம்மிடம் தெரிவித்ததாக மகேந்திரராஜா கூறினார்.

## ஹரிமன்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வது இதுவே முதல்தடவையென்றும், இலங்கைக்கு விஜயஞ்செய்தன்னது குறித்து தாம் மிக்க மகிழ்ச்சி கொள்வதாகவும் தெரிவித்தார்.

திரு. ஹரிமன் இன்று மாலையில் பிரதமர் டட்லியைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார். செனட்சபைக் கட்டிடத்தில் இப்பேச்சுவார்த்தை நடைபெற்றது. திரு. ஹரிமன் கவர்னர்ஜெனரலையும் சந்தித்தார்.

## வல் வ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பொழுது இரு நபர்களைக் கண்டனர் என்றும் விசாரித்த பொழுது தாங்கள் இந்தியாவைச் சேர்ந்தவர்களென்றும், தாங்கள் வந்த படகு கரையில் இருப்பதாகவும் அத்துடன் இலங்கைப் படகும் இருப்பதாகவும் தெரிவித்தனராம்.

இதன் பின்னர் இவர்கள் இருவரும் பாதுகாப்பில் வைக்கப்பட்டு பொலிஸ்-ராணுவ கோஷ்டியொன்று குறிப்பிட்ட இலக்கை நோக்கிக் கட்டுமரம் ஒன்றில் சென்றதென்றும் சிறிது தூரத்தில் படகுகள் நிற்பதைக்கண்டதும் பொலிஸ்-இராணுவக் கோஷ்டியினர் படகுகளை நெருங்கினர் என்றும் அப்பொழுது எதிர்பாராதவிதமாக எதிர்தரப்பிலிருந்து பொலிஸ் கோஷ்டியினரைநோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதென்றும் பதிலுக்குப் பொலிஸார் சுட்டனர் என்றும் பொலிஸ்தரப்பில்கூறப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து அப்படகுகளைப் பொலிஸ் கோஷ்டியினர் சென்று பார்த்த பொழுது அங்கு ஓர் இந்தியப் படகு மட்டும் இருந்ததென்றும் அதில் ஒருவர் இரத்தக்காயங்களுடன் காணப்பட்டார் என்றும் சொல்லப்படுகிறது. மற்றைய வள்ளங்கள் மாயமாக மறைந்துவிட்டனவாம்.

அங்கிருந்த வள்ளத்திலிருந்து சுமார் 8000 ரூபா பெறுமதியான இந்திய விலை உயர்ந்த சாரங்களுடன் இந்தியப் படகும் கைப்பற்றப்பட்டது.

நேற்று இரவு ஒரு மணிக்கு காயமடைந்த சாகுல் ஹமீது என்பவர் உடனடியாக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிறிது நேரத்தில் மரணமானார். இதுசம்பந்தமாக தொண்டமானாற்றைச் சேர்ந்த சண்முகவடிவேலு என்பவரும் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளார்.

கைப்பற்றப்பட்ட படகு அம்மாபட்டணத்தைச் சேர்ந்தது என்று கூறப்படுகிறது.

பொலிஸ் தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டர் திரு எஸ். வி. மூர்த்தி தொடர்ந்து விசாரணைகள் நடத்திவருகிறார்.

# 'தயாரிப்பாளரின் திறமையை நாம் பாராட்டவேண்டும்'

## ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன் நாடகவிழாவில் அரசாங்க அதிபர் பேச்சு

யாழ்ப்பாணம், ஞாயிறு

"தமிழ் நாடகங்கள் மேலும் மேலும் சிறந்த முறையில் மேடையேற்றப்பட வேண்டும். அப்பொழுதான் நாடகத்துறையில் வுழிப்புணர்ச்சி ஏற்படும். சிங்கள நாடகங்களில் பிறநாட்டுக் கதைகள் மொழிபெயர்க்கப்பட்டு மேடையேற்றப்படுகின்றன. அதேபோல தமிழிலும் நாடகாசிரியர்கள் கதைகளை மொழி பெயர்க்கவேண்டும்" என்று யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. வேர்னன் அபயசேகரா யாழ்ப்பாணம் நகர மண்டபத்தில், கொழும்பு சிவசக்தி கலா அரங்கினர் மேடையேற்றிய 'ஸ்ரீவிக்ரம ராஜசிங்கன்' நாடகத்திற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

ஒரு நாடகத்தைத் தயாரித்து மேடையேற்றுவது இலகுவான காரியமல்ல. முதலாவதாக நாடகத்திற்குக் கதாபாத்திரங்கள் வேண்டும். அத்துடன் நடிகர்களுக்கு வேண்டிய உடைகள், மேடை நிர்வாகம் போன்றனவும் நாடகத்திற்கு இன்றியமையாத அம்சங்களாகும். இவை எல்லாவற்றிற்கும் மேலாக ரசிகர்கள் நாடகத்தின் உயிர்நாடி.

இன்று இந்தநாடகத்தைத் தயாரித்த திரு. ஆர். ஜெகசோதியின் திறமையையும் பாராட்டவேண்டும். சரித்திர சம்பந்தமான நாடகங்களை மேடையேற்றுவது இலகுவான காரியமல்ல. ஆகையால் பொதுமக்கள் நாடகத்துறையில் ஈடுபட்ட திரு. ஜெகசோதிபோன்றவர்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் அளிக்கவேண்டும்.

# கடலில் வெடிச்சத்தம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கேட்டது. கடலிலிருந்தும் 2 வெடி கேட்டது. அப்போது எங்கள் வள்ளத்திலிருந்த சாகுல் ஹமீதுவின் தலையில் சூடு பட்டது. சூடு விழுந்தவுடன் தலையிலிருந்து இரத்தம் பீறிட்டு எங்கள் மேல் பாய்ந்தது. வெடிச்சத்தம் கேட்ட நேரம் எங்களுடன் வந்த கிழவரும், வேறொருவரும் இறங்கிப்போய்விட்டார்கள். பின்னர் எங்களை இங்குள்ள பொலிஸ் உத்தியோகஸ்தர்களும் இராணுவ உத்தியோகஸ்தர்களும் கரைக்குக் கொண்டுவந்து இருக்கச்செய்தனர்.

வல்வெட்டித்துறை பொலிஸ் இன்ஸ்பெக்டர் எஸ். வி. பத்திராஜ சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

28ம் திகதி பிற்பகல் 6 மணியளவில் காங்கேசன்துறை இன்ஸ்பெக்டர் மூர்த்தி என்னை சின்னமலை கடற்கரைக்கு பொலிஸ் கோஷ்டியுடன் வரும்படி அழைத்தார். அவருடைய உத்தரவின்பேரில் நானும் சார்ஜண்ட் இராசரத்தினமும் மற்றும் இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களும் அங்கு சென்றோம். அங்கு கொஞ்சக் கட்டுகளைக் கண்டோம். அக்கட்டுக்களை மூர்த்தி பாரமெடுத்தார். பிறகு என்னை கண்காணிக்கும்படி சொன்னார். அதன்பின்னர் இரவு 11 மணியளவில் வில்மட் சிங்கோ தொண்டமனாற்றுப் பாதையால் இரண்டுபேர் வருவதைக் கண்டு சந்தேகத்தின்மீது அவர்களை என்னிடம் கொண்டுவந்தார். அவர்கள் 'கள்ளத்தோணி'யாக இருக்கலாமென்ற சந்தேகத்தில் விசாரணைசெய்தேன், அவர்கள் கப்பலில் வந்ததாகச் சொன்னார்கள். வேறு மூவரும் வந்ததாகச் சொன்னார்கள். ஒரு வள்ளம் நங்கூரமிட்டு இருந்தது. நான் சார்ஜண்ட் இராசரத்தினத்தையும் மற்றும் சில இராணுவ வீரர்களையும் ஒரு கட்டுமரத்தில் சென்று பார்க்கும்படி சொன்னேன். சிறிதுநேரம் கழித்து டோர்ச் வெளிச்சம் ஒன்று கடலில் இருந்து தெரிந்தது. அதன்பின் ஐந்து வெடிச்சத்தம் கேட்டது. பிறகும் வெளிச்சத்தைக் கண்டேன். எங்கள் பொலிஸ் கோஷ்டியினர்தான் வெளிச்சத்தை அடித்திருப்பார்களென நினைத்தேன். [illegible] இந்த வெளிச்சம் 'சிக்கினல்' வெளிச்சமென நினைத்தேன். வெளிச்சம் தொண்டமானாறு பக்கமாக போய்க்கொண்டிருந்தது. நான்சந்தேகத்தின் மீது வில்மட்டையும் லெப்டினன்ட் ஜெயசுந்தராவையும் அந்த இடத்தில் நிறுத்திவிட்டு அவ்விடத்துக்கு புறப்பட ஆயத்தம் செய்த போது சார்ஜண்ட் இராசரத்தினமும் கோப்ரல் நந்தசேனவும் இரண்டுபேரைக் கூட்டி வந்தனர். அவர்கள் வள்ளத்திலிருந்ததாகவும் வேறு ஒருவர் காயமடைந்திருப்பதாகவும் சொன்னார்கள். காயமடைந்தவரை பொலிஸ்கான்ஸ்டபிள் வேரோராமூலம் ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தேன், சார்ஜனிடமிருந்த துப்பாக்கியையும் நந்தசேனவினுடைய இருதுப்பாக்கிகளையும் பாரம் எடுத்தேன்.

சார்ஜண்ட் இராசரத்தினமும், வில்மட்சிங்கோவும் சாட்சியமளித்தனர்.

பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு ரூபேர்ட் சில்வா ஸ்தலத்திற்குச் சென்று விசாரணை செய்தார். ஏ. எஸ். பி. தவராசா, இன்ஸ்பெக்டர் இராமநாதன் இன்ஸ்பெக்டர் பத்திராஜ, மேஜர் லபிரோய் ஆகியோர் விசாரணையின்போது சமுகமளித்திருந்தனர். ஏ. எஸ். பி. தவராசா சாட்சிகளை நீதிபதியின் முன் ஆஜர் செய்தார்.

## பொதுத் தராதரப் பத்திர பரீட்சை
### 40,000 மாணவர்கள் தோற்றுவர்

கொழும்பு, சனி

டிசம்பர்மாத இறுதியில் நடைபெறும் பொதுத் தராதரப்பத்திர (உயர்தர) பரீட்சைக்கு 40000 மாணவர் தோற்றுவார்கள் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

இப்பரீட்சைக்கு தோற்றுபவர்களில் 9,000 மாணவர்கள் தனிப்பட்டபரீட்சார்த்திகளாகும்.

இப்பரீட்சைக்கு இம்முறைதான் பெரும் தொகையான மாணவர்கள்தோற்றுவதாகபரீட்சைப்பகுதியைச் சேர்ந்தபேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். டிசம்பர் மாதம் 21-ல் ஆரம்பமாகும் இப்பரீட்சை ஜனவரிமாதம் 8-ம் திகதிமுடிவடையும்.

இப்பரீட்சையில் சித்திய[illegible]வர்கள் இலங்கைப்பல்கலைக்கழகத்தில் சேர அனுமதிக்கப்படுவார்கள்.

விராட் விஸ்வப்பிரம்மணேநம

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் பராபவ ஆண்டு ஐப்பசித்திங்கள் 15-ம் நாள் 31-10-66 திங்கட்கிழமை இரவு 9-21—10-50 மணிவரை வரும் சுபமுகூர்த்தத்தில் வண். மேற்கு திரு. சி. அப்புத்துரைப் பத்தர் அவர்களின் சிரேஷ்ட புத்திரன் திருநிறை செல்வன் நாகராசாப் பத்தர் அவர்களுக்கும் எங்கள் சிரேஷ்ட புத்திரி திருநிறை செல்வி கலாமணிக்கும் எமதில்லத்தில் நடைபெற இருக்கும் திருமண வைபவத்திற்கு உறவினர்களும் நண்பர்களும் சுற்றஞ்சூழச் சமுகந்தந்து மணமக்களை ஆசீர்வதித்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் அன்புள்ள சி. தா. கிருஷ்ணசாமிப் பத்தரும் பாரியாரும். 671/1 காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தங்கள் நல்வரவை விரும்பும் பொ. கந்தையாப் பத்தரும் பாரியாரும் (மணமகளின் பேரன், பேத்தி)

1458

## திருமணம்

பத்மநாதன் — இந்திராணி

பருத்தித்துறை செட்டித்தெருவைச் சேர்ந்த ஆலங்கால் பிரபல ஆயுர்வேத வைத்தியர் காலஞ்சென்ற திரு. தா. நடராஜா அவர்களினதும் திருமதி நடராஜா அவர்களினதும் புதல்வன் திருவாளர் செல்வன் பத்மநாதன் (ஆயுர்வேத டாக்டர்) அவர்களுக்கும், வதிரி கரவெட்டியைச் சேர்ந்த திரு இ. சின்னத்துரை (தலைமை ஆசிரியர்) அவர்களின் புதல்வி திருநிறைசெல்வி இந்திராணிக்கும் இம்மாதம் 31-ந் திகதி திங்கட்கிழமை மாலை 9 மணிக்கும் 10 மணிக்கும் இடையிலுள்ள சுபவேளையில் மணமகளில்லத்தில் சைவசமயமுறைப்படி திருமணம் நடைபெறும். உறவினர்களும், நண்பர்களும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர், தனிப்பட்ட அழைப்புக்கள் இல்லை.

1459

## திருத்தம்

29-10-66 ஈழநாடு பத்திரிகையில் 2ம் பக்கத்தில் 'யாழ்ப்பாணம் கூட்டுறவு மாகாண வங்கி' என்ற தலைப்பில் வெளிவந்த விளம்பரத்தில் 'குமாஸ்தாக்கள்' என்ற உபதலைப்பில் (ஆ) பிரிவில் வயது: 25—27 என்றிருப்பதை 23—27 எனத் திருத்தி வாசிக்கவும்.

1353

## நிலைதவறி நின்றோராம்
### 15 ரூபா அபராதம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

மதுபானம் அருந்திவிட்டு ரோட்டில் நிலைதவறி நின்றோராம் ஒருவர். அவருக்கு 15 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

செம்மணியைச் சேர்ந்த வல்லி சின்னத்தம்பி என்பவர் மதுபோதையில் நிலைதவறி நின்றதாகப் பொலிசாரால் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு நேற்றுக்காலை யாழ்ப்பாண மாஜிஸ்திரேட் திரு. ரி. ஜே. இராசரத்தினம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

எதிரி சார்பில் புறக்டர் ஏ. அன்ரனி ஆஜரானார். எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டார். மாஜிஸ்திரேட் 15 ரூபா அபராதம் விதித்தார்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி, 68-ம் இல[illegible] அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு அ[illegible] மாதம் 30ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org